www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்



"நித்தி"
இவர்பிரிவு
துயர்பெரிது

# வெளிச்சம்

ஆனி 1994—விலை 20/-



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

"வெளிச்சம்"
ஆவணி இதழ்
சிறுகதைச் சிறப்பிதழாக
வெளிவருகிறது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

25 வருடங்களாக மின்ஒளி அனுபவத்தில்
மிளிர்பவர்கள்

கோவில் திருவிழாக்கள்
திருமண வைபவங்கள்
அரங்கேற்றங்கள்
இசைவிழாக்கள்
மற்றும் உங்கள் அனைத்து விழாக்களுக்கும்
அழைத்து மகிழுங்கள்

# மனோ ஒளி வெள்ளம்

இந்திரபுரி என்று மனதை மயக்கும்
ஒளி வெள்ளம் பாய்ச்சி
உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்பவர்கள்

## மனோ ஒளிவெள்ளம்

வர்ண ஜாலம் காட்டும் ஒளி வெள்ளம்

## மனோ ஒளி வெள்ளம்

**மனோகரன்**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு சனிக்கிழமை காலை
கண்ணிமைக்கும் நேரத்துள்
வானத்தைக் கிழித்துக் கொண்டு
அது வந்தது.
யாரும் எதிர்பார்க்கவில்லை
மின்னல்.
தொடர்ந்து ஒரு வெடியோசை.
எல்லாம் நடந்து முடிந்தது.
ஐயோ; நேற்றிருந்த அழகென்ன?
வெளிர் நீல நிறத்தில் அந்த வீடு
முற்றத்துப் புல்வெளி
வரிசைகட்டிப் பூத்திருக்கும் ரோஜாச்செடிகள்
வாசலுக்குப் போனால்...
ஓடிவந்து வாலாட்டும்சடைத்த பொமேரியன்
கவிதையொன்று காற்றில் திரிவதுபோல
சிரித்தபடி முகம் காட்டும்
அந்தவீட்டு இளம்பெண்
அவள் கணவன்
முற்றத்து ஊஞ்சலில்
அல்லது தாயின் தோள்களில்
அடிக்கடி காணும் அவர்களின் பிஞ்சுப்பூ
எதுவுமே தப்பவில்லை.
எல்லாமும் இல்லாமற் போய்விட்டது.
வந்த 'அசுரப்பறவை' கூடடைந்திருக்கும்
ஒப்பாரி, ஓலம் கொழும்புக்குக் கேட்டிருக்காது.
பார்த்த பக்கத்து வீட்டுச் சிறுவனை
அன்றிலிருந்து காணவில்லை.
பயிற்சிக்குப் போய்விட்டானாம்.

— மாலிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிச்சம்
ஆனி 1994
இதழ் 26

"உலகத் தமிழிலக்கியப்பரப்பில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கு ஈழத்தமிழிலக்கியமே வழிகாட்டியாகும் வாய்ப்பு அதிகம் உண்டு. தமிழீழத்தில் இன்று உருவாகும் சத்திய தரிசனங்களான பொய்யில்லா இலக்கியங்களே இனிப் போற்றப்படும். இனிவரும் காலம் இத்தகைய படைப்புக்களையே அங்கீகரிக்கும்" என்று தமிழகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்து உலகெங்கும் தமிழர்கள் வாழும் நாடுகளெங்கும் இப்படி எழுதவும், பேசவும் தொடங்கியுள்ளனர்.

"ஈழத்தின் அரசியல் கட்டுமாணம் ஈழத்தின் கலை - இலக்கியப் போக்குகளை வழிநடத்துகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம் போராட்ட இலக்கியத்தின் தளமாக இருக்கிறது..... யாழ்ப்பாணப்பிரதேசம் கடந்த மூன்றாண்டுகளுக்குமேலாக நவீன வசதிகள் யாவற்றையுமே இழந்து போய் நிற்கிறது. அங்கு மின்சாரம் சுத்தமாகவே இல்லை. ஆனாலும் ஆச்சரியம், இங்கே கனன்றெரியும் கலை இலக்கியம் வேர் கொண்டு முளைத்து வளர்ந்து வருகிறது. காகிதமே தடைசெய்யப்பட்ட மண்ணில் எல்லாப் பிரயத்தனங்களுடனும் பத்திரிகைகள் வெளியாகின்றன" என்று இவ்வாண்டு 'இந்தியாடுடே' சஞ்சிகையின் இலக்கிய ஆண்டு மலரில் "பிரச்சினைகளுக்கு நடுவே" என்ற கட்டுரையில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் நான் பேசிக்கொண்டிக்கும் போது மூன்று குண்டுகள் வெடித்ததைக்கேட்டேன். மக்கள் பதட்டமடையவில்லை. சிரித்தனர். இது எங்களுடைய அன்றாட வாடிக்கை என்றனர். வெளியே குண்டுச்சத்தம். உள்ளே "தமிழனுக்கான இசை எது" என்பதுபற்றி ஆய்வு. இந்த முரண் அணியை யாழ்ப்பாணம் முழுவதிலுமே பார்க்கலாம். வீரம் செழிக்கும் பூமியில் கலைகள் செழிப்பதைக் கண்டேன் என்பது அண்மையில் தமிழீழம் வந்து திரும்பிய சுபமங்களா ஆசிரியர் திரு. கோமல் சுவாமிநாதன் தன் தமிழீழப் பயணக் கட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

இங்கு நாங்கள் தினம் தினம் தீக்குளித்தபடி, நின்ற இடத்திலேயே நிமிர்ந்து நின்று போராடி எழுதும் எழுத்துக்களும், படைக்கும் கலைவடிவங்களும் எல்லோருக்கும் வியப்பை ஏற்படுத்துவதுடன் விதந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பிடப்படும் வகையிலும் உன்னதங்களாகவும்
உச்சங்களைக் தொட்டதாகவும் உருவாகி வருகின்றன.
இந்த உயரிய வளர்ச்சிக்கு
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், வெளிச்சமும்
கணிசமான பங்களிப்பை செய்து வருவதாக எழுதினால்,
அதை எவரும் மறுத்துரைக்கமாட்டார்கள்
என்றே நம்புகின்றோம். என்றாலும்
''எல்லாம் எமக்குள் அடக்கம்'' என்று பெருமையை
எமக்கு மட்டும் பூசிக்கொள்ளும் எண்ணம் எமக்குக்கிடையாது.
இந்த உன்னத வரலாற்று நகர்வுக்கு
எம்மண்ணின் இலக்கியப்படைப்பாளிகளும், கலைஞர்களும்
கொடுத்த விலையும், ஆற்றிவருகின்ற
பங்கும் கணிசமானது.
நெஞ்சார விடுதலையை நேசித்து, ஈழத்தமிழரின் அனைத்துத்
தளை நீக்கத்துக்கான போராட்டத்தை ஏற்றுக்கொண்டு,
தினசரி எதிரியின் சொல்லவொண்ணா அழுத்தங்களைத்
தாங்கி தங்கள் படைப்பாற்றல் மூலம் உலகத்தின்
பார்வையை தமிழீழத்தின் மீது படும்படி செய்து வருகின்ற எமது
கலை, இலக்கிய ஆற்றலர்களை நாங்கள் பாராட்டுகின்றோம்.
அவர்களுக்குரிய சிம்மாசனங்களை வழங்கி சிரம்தாழ்த்தி
வணங்கிக்கொள்ளுகிறோம்.
எம் தோளில் கிடக்கின்ற சரித்திரச் சுமையை சரியாக இனம்கண்டு
தொடர்ந்து எம் மண்ணை புதிது புதிதாக பதிவு செய்வோம்.
விடுதலைக்கு அதிக விலைகொடுக்கும், மக்களுடனும்
போராளிகளுடனும் இணைந்து நாமும் வழிநடப்போம்.
எமது செல்லும்வழி இருட்டல்ல. நல்ல தெளிவாகப் பாதை
தெரிகிறது. இந்தப் பயணம் இலக்கை அடையும் என்ற
நம்பிக்கை எமக்குண்டு. தடுமாறாத தலைமை விடுதலையை
பெற்றுத்தரும் என்று திடமாக நம்புகின்றோம்.
நம்பிக்கை — இணைவு — போராட்டம். இந்த மண்ணின்
உணர்வை கலை, இலக்கிய படைப்பாளிகளும்
ஏற்று முன்னேறுவோம். வெளிச்சம் பரவும் வேளை
புலர்ந்துவிட்டது. வெற்றி நமதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எனது மக்களின் விடுதலைக்காக...



## தமிழீழத் தேசியத்தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களின் கருத்துத் தொகுப்பிலிருந்து

# பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதார சுபீட்சம்

நாம் உருவாக்க இருக்கும் தமிழீழம் பாட்டாளி வர்க்கத்திற்கு சுபீட்சமளிக்கும் சமதர்ம சமுதாயமாக அமையும். நாம் தேசிய விடுதலைக்காக மட்டும் போராட வில்லை. தொழிலாள விவசாய வர்க்கங் களுக்கு பொருளாதார விடுதலையை அளிக் கும், சோஷலிச சமுதாயத்தை கட்டி எழுப் பும் இலட்சியத்திற்காகவே நாம் போராடு கின்றோம். நாம் ஒடுக்கப்படும் மக்களாக சுரண்டப்படும் வர்க்கங்களாக போராடுகின் றோம். இந்தப் புரட்சிகரச் சக்திகளின் பிரதி நிதிகளாகவே நாம் எமது போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். [illegible] புரட்சிகரப் போராட்டமானது உலகப் பாட் டாளி வர்க்கப் புரட்சியின் ஒரு இணைபிரி யாத அம்சமாக அமைகின்றது. இன்று எமது புரட்சிப் போராட்டம், முழு உலகத் தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக பிரசித்தி பெற் றுள்ளது.

எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும், எமது மக்களாகிய உங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடுமே எமது போராட்டத்தை உலக அரங்கில் பிரசித்தப் [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணினம் புரட்சி சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது

நாம் ஒடுக்கப்பட்டுவரும் ஒரு மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளே, எமது வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கியொடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவி வரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம் தான் பெண் ஒடுக்குமுறை. பழமை வாதத்திலும் மூட நம்பிக்கைகளிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக்காலம் தொட்டே பெண் அடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது; அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது.

எமது சமூகத்தின் சனத்தொகையின் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசிய போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி போராட்டத்திற்கு அவர்களை அணி திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழ பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது.

# மாவீரர்களின் இரத்தத்தால் எமதுவரலாறு எழுதப்படுகிறது

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஒரு இலட்சியவாதி, ஒரு உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன், மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமானது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

ஒரு விடுதலை வீரனின் சாவு, ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல. அந்தச் சாவு, ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலைவீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கி வந்த இலட்சியநெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிவிடுகிறது. ☐☐

www.tamilarangam.net





# நேற்று இன்று நாளை

புதுவை இரத்தினதுரை

தங்கத் தகடடித்துத் தகதகக்கும் வானமது
மஞ்சள்குளித்து மகிழும் பொன்மாலையிலே ..
சூடாறிக் கொண்ட சூரியன்போய்
மிகவிரைவாய்;
தேரேறி மேற்குத் திசைபார்த்துச் செல்லுகின்ற
நேரமதில்
பச்சை நிறமான நெல்வயலில்
ஈரம்சுவற,
இடுப்பொடியப் புல்பிடுங்கி;
மீளும் இளம் பெண்கள் மிடுக்காய் நடைபயில்வர்.
ததும்பி வழிகின்ற
தாமரைப்பூம் பொய்கையதில்
குவிந்து,
ஊர்ச்சிறுவரெலாம் குதித்துக் கலக்கிடுவர்.
மாடெல்லாம் மேய்ந்து மடிநிரப்பி;
வரம்பேறி
வீடுதிரும்ப வெளிக்கிட்டு உடல்நெளிக்கும்.
''அரசவெளி அம்மன்'' ஆலயத்துப் பூசைமணி
தரவை வயல்கடந்து தாவி;
ஊர் எல்லைவரை,
விரையும்.
நீரள்ளி வீடேகும் சிற்றிடையார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காற்சலங்கையோசை கல்லொழுங்கை மீதிருந்து;
மேற்கிளம்பி,
இளசுகளின் மேனியிலே கிளுக்கிண்டும்.
விழுதெறிந்த ஆலவிருட்சத்தின் கீழிருந்து
பொழுதுபடும் வரையும் பேசிக்கழிக்கின்ற;
கிழடுகளும் மெல்லக் கிளம்பி நடைபயில்வர்.
தோட்டக்கிணற்றின் துலா அசையும்.
பாட்டுவரும்,
காட்டுக் கொடிசிலிர்த்துக் கண்மலரும்.
சில்லென்று;
கற்றைக் குழல்கலைத்து காற்றுவந்து விளையாடும்.
அற்புதமாய் எல்லாம் அழகொளிரும்.
கிராமத்து;
வற்றா எழில் கவிதை வரம்புக்குள் சிக்காது.
நேற்றிருந்த வாழ்வை நினைத்தால் .....
நெஞ்சத்தில்;
தீப்பிடித்துக் கொள்ளும்.
தித்தித்த வாழ்க்கையினி
எப்போது?
எங்களுக்கு ஏனிந்தத் தண்டனைகள்?
கப்பிக்கிடக்கும் இருள் கலைவதினி எக்காலம்?
குயிலிருந்து பாடிய எம்கொம்புகளில்
மீண்டுமினி
குயிலிருந்து பாடிக் குதூகலித்தல் எப்போது?
எறிகணையும்;
குண்டு ஏற்றிவந்து வீசுகின்ற
வெறிகொண்ட ''புக்காரா'' விமான இரைச்சலதும்;
குழிவிழுந்த வீதிக் குலுக்கல் பயணமதும்,
வழிதெரியா கும்மிருட்டு வாழ்வும்,
பசிவயிறும்;
பஞ்சுவிளக்கும், பயம் பிடித்த முகங்களதும்,
பிஞ்சில் சொரிகின்ற பிணியும்,
எம்மண்ணிருந்து
என்றகலும்?
எல்லாம் எழிலாதல் எப்போது?
அஞ்சற்க!
எங்கள் அடுத்த தலைமுறைக்குள்
''நஞ்சணிந்தவீரர்'' நாடமைப்பர்.

www.tamilarangam.net



நடக்கின்ற
வெஞ்சமரை வென்று வீதியெங்கும் முரசறைவர்.
வேலியொன்று போட்டு வெறிநாய்கள் உட்புகுந்து
காலில் கடிக்காமல் காவலுக்கு நின்றிருப்பர்.
தென்றல் தடவிச் செல்லும்.
திசையெங்கும்
கன்றெல்லாம் துள்ளும்.
கறவையெலாம் பால்சொரியும்.
நாதஸ்வரத்தோடு
தவில் வீணை மத்தளங்கள்
பேசும்;
மரங்களெலாம் புதிதாய் துளிர்த்துவரும்.
பூசுமஞ்சள்கரைந்து பொன்னாறு ஓடுதல்போல்
வாசம்சுமந்து வழிநடக்கும்.
வீதியெங்கும்;
காற்சலங்கை மீண்டும் கலகலக்கும்.
பூமரங்கள்
பூத்துச் சொரியும்.
"புலம்பெயர்ந்த குருவி" யெல்லாம்
கூடுதிரும்பும்
கோயிலெல்லாம் கொடியேறும்.
நாடுதிரும்பி நம்கையில் வந்ததென்று
பாடும் குரலெல்லாம் பரவும்.
அஞ்சற்க! □□

**வெளிச்சம்**
கலை, இலக்கிய சமூக இதழ்

வெளியீடு:
**விடுதலைப் புலிகள்**
**கலை, பண்பாட்டுக்கழகம்**

உருவாக்கம்:
**ஆசிரியர் குழு**

ஓவியம்:
**தயா**

இதழ் அமைப்பு:
**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

அச்சு:
**ம. மரியதாஸ்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நகர்வு

**க. சட்டநாதன்**

தொலைவில், ஒற்றையாய் விழுந்து வெடித்த 'ஷெல்' சத்தத்துடன் அவன் விழிப்புக்கண்டான். எழுந்து உட்கார்ந்து கொண்டவன்; கிழக்குச் சாய்வில், முன் திண்ணையில், தாத்தா, சோபாவில் சாய்ந்தபடி, ஏதோ மென்று கொண்டிருப்பதை அவதானித்தான். அவர் அருகில் சதா எரிந்து கொண்டிருக்கும் 'ஜாம்' போத்தல் விளக்கு. அந்த விளக்கொளியில் எல்லாம் தெரிந்தது.

அவரது கைக்கெட்டும் தூரத்திலேயே அவரது உலகம் இருந்தது. எழுந்து இரண்டடி எடுத்து வைப்பதற்குக் கூட அவரால் முடிவதில்லை. காலில் - சற்றுப் பெரிதாகவே - கல்லைக் கட்டிப் போட்டது போல அவர் அசையாமல் கிடந்தார். ஆனால், அவரது கைகள் மட்டும் அசுரத்தனமாக இயக்கம் கொண்டன. எப்பொழுதும் அவை பரபரத்தபடி தான். இப்போது கூட, அவை எதையோ மசித்து, வாயில் போட்டுக் கொண்டிருந்தன.

'என்ன வாயிருக்கும்...? அம்மா வறுத்துக் கொடுத்த பொரியரிசிமாவா...? கடலைப்பொரியா...? அல்லது, அவர் விருப்பத்துடன் மெல்லும் வெற்றிலைச் சருகும் கழிப்பாக்குமா...?,

வலது பக்கமாக, அவரது வெள்ளிப் பூண்போட்ட கைத்தடி சோபாவில் சாத்தியபடி கிடந்தது. அது, இப்போதெல்லாம் நடப்பதற்குப்பயன்படுவதில்லை. காகம், கோழி கலைப்பதற்கே பெரிதும் பயன்படுகிறது.

இடது பக்கமாக, சற்றுத்தள்ளி -ஒரு கருங்காலிப் பெட்டி; அதில்தான் அவரது அற்பமான 'வைப்புச் செப்புகள்' இருந்தன.

பெட்டியில், நார் நாராக நைந்து போன அவரது கல்யாணப்பட்டு, அதற்கு மேலாக ஒரு சோடி ஆரணி வேட்டி, சால்வை, ஒரு பழைய மல் நஷனல், உரு வழிந்து, வெள்ளைப்புள்ளி விழுந்த பாட்டியின் நிழற்படம், அவளது கல்வெட்டு, கொஞ்சம் சில்லறைகள்.

பெட்டியின் மேலாக; ஸ்ரீ தேவி மகாத்மியம், தேவாரத்திரட்டு, திருவாசகம், திருப்புகழ், அபிராமி அந்தாதி என்று சில பாசுரப் புத்தகங்கள். எல்லாமே கட்டுக் குலைந்து, கறையான் பட்டு, ஓரம் சிதைந்து இற்றுப் போய்க் கையோடு வந்து விடும் போலிருந்தன.

அம்மாவைக் காணவில்லை. புதறனுக்குப் பின்னால், வயல் பக்கம் போயிருப்பாள். சிறுசிலேயே வாலாயப் படுத்திய பழக்கத்தை அவளால் மாற்றிக் கொள்ள முடியவில்லை.

கிணத்தடியில் அரவம் கேட்டது. 'அம்மாவாகத்தான் இருக்கும்' என நினைத்தபடி இவன் பாயைச் சுருட்டி, கட்டிலின் ஓரமாக வைத்துவிட்டு, முற்றத்துக்கு வந்தான்.

விரிச்சிக உடு தென்கிழக்கு வானில் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் வாலைத் தொட்டபடி, கிழக்கு வான் வெளியில், வடக்காகப்படரும் பால் வீதியின் அழகு அவனைப் பரவசம் கொள்ளவைத்தது.

இளங்காலை ஈரமாயிருந்தது. ஈரம் நிரம்பிய காற்று அவனை இதமாகத் தழுவியது. அந்த இதத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிதந்தவனைக் குழப்புமாப் போல, தூரத்தில் - சோளா வத்தைப் பக்கமாக, மீளவும் 'ஷெல்' ஓசை. தொடர்ந்து, பெருங்குளத்து மாரியின் உதய பூசை மணியும் கேட்டது.

'ஐந்து மணியா...?'

இவனும் கிணத்தடி பக்கம் போனான்.

அம்மா சூரியனில்லாமலே நமஸ்காரம் செய்து கொண்டிருந்தாள்.

இவனுக்குச் சிரிப்பாய் வந்தது.

ஐயா, நிச்சயமாய் அஞ்ஞாப்பக்கம் தான் போயிருப்பார். இன்று கணுக்கழுவல் என்று சொன்னது இவனுக்கு ஞாபகம் வந்தது. ஐயாவுக்கு அஞ்ஞாவிலேயே ஒரு கட்டில் போட்டுக் கொடுத்துவிட்டால்தோதாயிருக்கும்.

ஆயாசம் - அலுப்பென்றால், அங்கேயே ஒரு சிறு தூக்கம் போட்டுவிட்டு, தோட்டத்தையும் பார்த்த மாதிரி இருக்கும் அவருக்கு.

தோட்டத்தில் கைபட்டால் அவருக்கு எல்லாமே மறந்து விடும். சொக்கிப் போய், தன்னை மறந்த லயிப்பு வந்து விடும்.

தாய்வாய்க்கால் பக்கம் முளை கொள்ளும் புற்தளிரைக் கிள்ளுவது. எங்காவது ஒரு பக்கத்தில் 'பாச்சா' காட்டி விட்டுத்திடீரெனத் தலைகாட்டும் புகையிலைக் கணுவை உடைப்பது. இளங் கன்றுகளை நிழல் அகற்றிப் புழுப்பார்ப்பது, அடி எருப் பரவுவது, கண்டு கட்டி, இலை ஒடித்துத் தறைசாறுவது, என ஏதாவது வேலை-பிரியமாகச் செய்ய அவருக்குத் தோட்டத்தில் இருக்கும். அதைச் செய்வதில் அவருக்கு அலுப்புச் சலிப்பு இருப்பதில்லை.

காலைத் தேனீர், சாப்பாடு, மதியச்சாப்பாடு, மாலைத்தேனீர் என்று எல்லாமே தோட்டத்துக்குத் தான் அவருக்குவரவேணும். இரவுச்சாப்பாடு மட்டும் வீட்டில். மாலைக் கருக்கலானதும் தோட்டக்கிணற்றிலேயே ஆரச்சோர தலையில் ஊற்றிக் கொள்வார். இரவு உணவாக அவருக்கு ஏதாவது கோதுமைப் பண்டம் வேணும். ரொட்டி அல்லது பிட்டு, மீன் குழம்பு இருந்தால் ஒரு பிடி கூடச் சாப்பிடுவார்.

சாப்பிட்டதும், முன் திண்ணையில் சரிந்து கொள்வார். அபூர்வமாக, இரவு வானொலியின் முன் இருப்பார். சங்கீதம் அவருக்குப் பிடிக்கும். ஞானமும் உண்டு.

மனதை ஈர்க்கும் விஷயங்களில் ஆழ்ந்து ஒன்றிப் போவது அவரது இயல்பு.

தம்பி! என்று அவனையோ, அல்லது பிள்ளை பாக்கியம்! என்று அம்மாவையோ அழைக்கும் போது அவரது அகத்தில் சுரக்கும் இனிமை கண்களில் தெரியும்.

தாத்தாவில் அவருக்கு எப்போதும் ஒரு மரியாதை உண்டு. அது அவர் பெண் கொடுத்த மாமனார் என்பதால் மட்டுமல்ல, தாய் மாமன் என்பதாலும் தான்.

அம்மா, ஐயாவைப் போல அப்படியொன்றும் அசுர உழைப்பாளி அல்ல. சமையலுடன் அவளது வேலை முடிந்து விடும். அபூர்வமாக, தனது வேலைகள் ஒழிந்த கையுடன், புதறனில் கத்தரிச் செடிகளில் ஆமை வண்டு பார்த்து இலை ஒடிப்பாள். சந்துப் புழுப் பார்த்துக் கொழுந் தெடுப்பாள். தக்காளி, மிளகாய் நட்டிருந்தால் தானாகவே பூச்சி கொல்லி விசிறுவாள். எதுவுமில்லை என்றால் கல்கியோ, விகடனோ அவளை ஓராட்ட - சரிந்து, அயர்ந்து தூங்குவாள். மாலைத் தூக்கம் அவளுக்கு இப்பொழுதெல்லாம் வேண்டியிருக்கிறது.

அம்மாவைக் கடந்து, கிணற்றுக்குத் தென்புறமாக வந்தவனின் காலில் சுரீரென ஏதோ குத்தியது. இடது குதியில் விஷம்பட்ட கடுகடுப்பு. 'எலுமிச்சைமுள்' என முனகியவன், முள்ளைப்பிடுங்கித் தூரவீசினான். அவனது பார்வை முற்றத்தை ஒட்டிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கரும்பூதமாய் நின்ற எலுமிச்சையில் லயித்தது. அதைப் பார்த்ததும் பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாய் அவனுள் கிளர்ந்தன.

'ஒரு பத்து வருஷமிருக்குமா ?'

கிணத்தடி எலுமிச்சை போகம் தப்பாமல் காய்க்கும். பூவும் பிஞ்சுமாய் குலுங்கி நிற்கும். இவன், ஊர்ப்பிள்ளைகளை எல்லாம் கூட்டி வைத்து, முற்றத்தில் காற்பந்தாடுவான். அந்த மரத்தின் காய்கள் தான் பந்து. முன் திண்ணை விளிம்பில் பட்டு, காய்கள் உடைய உடைய, புதிது புதிதாகக் காய்களைப் பறித்து, பிள்ளைகள் பந்து ஆடுவார்கள்.

அப்பொழுதெல்லாம் இவனது அணியின் 'கோல் கீப்பர்' வத்சலா தான்.

''பெட்டையள்.. புட் போல் அடிக்கிறதோ...!''

மற்றச் சின்ன வட்டன்களின் பகிடி. குபீரெனச் சிரிப்பொலி அங்கு பரவும்.

"கோல்கீப்பர் தானே..." என இவன் வத்சலாவுக்காகப் பரிந்து பேசுவான்.

அவனது அந்தப் பேச்சில் நெகிழ்ந்து, வத்சலா ஓடி வந்து, அவனது சின்னி விரலைப் பற்றியபடிக்கு, அவனது முகத்தை நேராகப் பார்த்துச் சிரிப்பாள். கண்களில் நீர் முட்டியபடி இருக்கும். அந்தப் பரிவில், பிரியத்தில் ஜன்ம பரியந்தப் பட்ட ஒரு உறவின் இணக்கம் இருக்கும்.

அவளில் அன்று விழுந்த பிரியம் இன்றுவரை தொடர்கிறது. அந்தக் கிராமத்தின் புழுதிபட்ட பெட்டை என்ற தகுதியை விட அவளிடம் மனசு விழுந்து ரசிப்புக் கொள்ள அப்படி என்ன இருக்கிறது?

மத்திய கல்லூரியிலும், பின்னர் பல்கலைக் கழகத்திலும், இப்பொழுது கற்பிக்கும் சஸ்வதியிலும்-ராஜேஸ், ரதி, நிதி, வேணி, கலா என எத்தனை பெண்கள் இவனிடம் சலனப்பட்டு-இவனைச் சலனப்படுத்தியுமிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மீறி, ஒரு ஆன படிப்புக் கூட இல்லாத இவளிடம், மாய்ந்து போவது எதனால்.

அவள் அழகி. இன்னும் இன்னும் ஏதோ எல்லாம் அவளிடம் இருந்தன. பார்வை விழுந்தால் எடுக்க மனசே வராது; நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

இரு பேச்சுப்பேச அவளுக்குத் தெரியாது. ஒழிப்பு மறைப்பு ஏதுமில்லாத வெள்ளை மனசு. இவனையே வளையவரும் அவளிடம் ஏற இறங்க பேசினால் போதும். மூக்கு நுனி சிவக்க, விழிகள் அழுத்தமாகவே நியாயம் கேட்கும்.

அப்பொழுது இவன் பேச்சிழந்து, கூச்சப்பட்டவனாய் ஒதுக்கம் கொள்வான். இரண்டொரு நாளில் எல்லாமே சரியாகிவிடும். அவளாகவே வந்து இவனிடம் மீளவும் ஒட்டிக் கொள்வாள்.

வீட்டில், அவனை விட்டால் அவள் அதிகம் அக்கறைப்படும் ஜீவன் தாத்தா தான். அவருடன் மணிக்கணக்காக மினக்கெடுவாள். அவருக்கு உதவி, ஒத்தாசை என்று விழுந்து விழுந்து செய்து கரைந்து போவாள்.

ஒரு சமயம், மழை பன்னீராய் தெளித்துக் கொண்டிருந்த மாலைக் கருக்கலில்- கிணற்றடிக்கு அருகாக உள்ள வாழைப் புதரிடையே- இவனை இழுத்து வைத்துக் கொண்டு பலதும் பத்தும் பேசினாள் இடையில், எதேச்சையாக கண் இமைகள் படபடக்க,கொஞ்சம் வெட்கம் கலந்த குரலில்; ''கட்டிறதெண்டா என்ரை வரதனைத்தான்...'' என்று ஒரு வார்த்தைசொன்னாள். அவளது அந்த வார்த்தை, உயிரையே பட்சமாய்ப் பற்றி ஒரு பாடுபடுத்தியது.

அந்தப் பேச்சுப் பேசிய பிறகு, அவளை மறக்க அவனால் எப்பொழுதுமே முடியாமல் போய் விட்டது. இளமையும், இங்கிதமும் மிகுந்த, அந்தப் பெண்ணின் மீதான பிரேமை, எந்தத் தடைகளையும் தாண்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளரக்கூடிய வலிமை பெற்றஒன்றாகவே அவனுக் குத் தோன்றியது.

''தகப்பனைத்தின்னி... தாயிருந்தும் இல்லாத மாதிரி...நோயாளி. நடைப் பிணம்... அதோடை சொத் துப்பத்தெண்டு ஏதுமில் லாத பெட்டை...''

அம்மாவின் முணு முணுப்பு.

''உன்ரை படிப்புக்குச்சம னாய் எதேன் பார்த்தால் நல்லம்... அது தான் மதிப் பு..மரியாதை.. நாலு பேர் கீழ்க்கண் கொண்டு பார்க் கிற மாதிரி நடந்து போடா தை...''

ஐயாவின் அறிவுரை.

என்னதான் ஐயாவும் அம்மாவும் அப்படி இப்படி என்று குறைபட்டுக் கொண் டாலும், அவனது ஆசை களைமீறி, எதுவும் செய்ய மாட்டார்கள் என்பது அவ னுக்குத் தெரியும்.

பழைய நினைவுகளில் தோய்ந்தபடி, கிணற்றில் குளிர்ந்த நீரை அள்ளி ஆரச்சோர ஊற்றியவன்— அதிர்ந்து நிலைகுலையும் வகையில்,அந்தப் பேரோசை மிக நெருக்கத்தில் கேட்டது.

செல்லாச்சி வளவுப்பக் கம்தான் அந்த ஆட்டிலறி ஷெல் விழுந்து வெடித்துச் சிதறியது. 'வெறுங்காணி, உயிர்ச்சேதமிராது' என நினைத்தவனுக்கு, அடுத்த ஷெல் சங்கக்கடைக்கும் அர சடிக்கும் இடையில், மதவ டியில் விழுந்தபோது குலை நடுங்கியது.

''சின்ன மடுப்பக்கத் திலை இருந்துதான் ஷெல்ல டிக்கிறாங்கள்... துலைவான் கள் வெளிக்கிட்டிட்டாங்கள் போலை ''

பதட்டப்பட்டவளாய் அம்மா ஓடிவந்தாள்.

''அந்த மனிசனைக் கூப்பிடப்பு...... அஞ்ஞாப் பக்கம்போனது ''

படலைவிடும் சத்தம் கேட்டது; கூடவே ஐயாவின் குரலும் கேட்டது:

''எதுக்கும் ஆயத்தமா யிருக்கிறது நல்லது நெருக் கடி ஏதும் எண்டால் சாட் டிப் பக்கம் அல்லது மண்கும் பான் பக்கம் போய்த்தான் வரவேணும் போலை கிடக்கு.''

எதற்கும் கிறுங்காத ஐயாவின் குரலும் ஆச்சரி யப்படும் அளவுக்குப் பத களிப்பு.

அவனும் ஐயாவும் முன் திண்ணைக்கு வந்தபோது, அம்மா - தாத்தாவுக்கு பெரிய வாளியொன்றில் தண்ணீர் எடுத்து வைத்த படி இருந்தாள். கைத்தடி யையும் அவர் பக்கமாக நகர்த்தி வைத்தவள். தலை தலையென்றடித்துப் புலம் பத் தொடங்கினாள்:

''அப்புதான் பாவம்... போட்ட இடத்திலை போட் டபடிக்கு விட்டிட்டு ஓட வேண்டியிருக்கு ..''

''பள்ளிக் கூடத்திலை இருக்கிற சென்றியை லேசிலை உடைக்கேலாது .. பொடியள் விடமாட்டாங் கள்...... பயப்பிடாதை பிள்ளை ..''

ஐயா, அம்மாவுக்கு ஆறுதல் கூறினார்.

சாமி அறைக்குச் சென்ற அம்மா, பெட்ட கத்தை இழுத்துப் பூட்டும் சத்தம் கேட்டது. அறைக் கதவையும் பூட்டியபடி வெளியே வந்தாள். அவளது கையில் ஒரு சிறு சூட்கேஸ். அதில் சில உடுப்புகள், நகை, ரொக்கப்பணம், காணி உறுதிகள், சேமிப்புவங்கிப் புத்தகம் என்று எல்லாம் இருந்தன.

அவனும், அவனது உட மைகள் அடங்கிய பிறீவ் கேசை ஐயாவிடம் தந்தான்.

முன்திண்ணைக்கு வந்த அம்மா, தாத்தாவைப் போர்வையால் இழுத்துப் போர்த்தியபடி, குனிந்து அவரது நெற்றியில் முத்த மிட்டாள்.

''போயிற்று வாற னப்பு ..''

அம்மாவின்குரல் இள கிக்கரகரத்தது. திரண்டு வந்த கண்ணீரை முந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தானையால் துடைத்துக் கொண்டாள்.

தாத்தா அவளைப் புரிந்து கொண்டவராய், தலையசைத்து விடை தந்தார்.

சைக்கிளைத் தூக்கி முற்றத்தில் விட்டபோது, ஹெலிச்சத்தம் கேட்டது. சுழன்று வந்து வேவு பார்த்த ஹெலி, ஃப்வ்ரிக்கலிபரை சரமாரியாகப் பொழிந்தது. சைக்கிளை முற்றத்தில் விட்டுவிட்டு, வீட்டுத் தாவாரப்பக்கம் இவன் ஓடினான்.

''பயப்படாமல் சைக்கிளை எடுதம்பி நடக்கிறது தான் நடக்கும்...''

ஐயா அவனுக்குத் தைரியந்தந்து, துரிதப்படுத்தினார்.

ஐயா முன்னால் செல்ல, இவன் சைக்கிளை உருட்டியபடி பின்னால் நடந்தான். அம்மா சூட்கேசும் கையுமாக அவர்களுக்குப் பின்னால் வந்தாள்.

வான்பரப்பில் வித்தியாசமான ஓசை. 'பொம்மரா ?' இரண்டு பொம்மர்கள் சோடி கட்டிக்கொண்டு பறந்து வந்தன. வந்த வாகில் வங்களாவடியில் தலைகுத்தின. ஐயாவும் அம்மாவும் நிலத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். இவன் கிழக்கு வேலியோடு ஒதுங்கினான். அடுத்தடுத்து நான்கு குண்டுகள் பேரோசையுடன் விழுந்து வெடித்தன. அம்மா அலமந்து, பெருங்குளத்தாளையும் பட்டவேம்பானையும் கூவியழைத்தாள். பொம்மர்கள் இப்பொழுது சற்றுத் தள்ளி, தென்மேற்புறமாக நகர்ந்து, இரு குண்டுகளைப் போட்டன இளம்புவரியில்-வானத்தில் அவ்விமானங்களின் சாகசத்தை இவன் பார்த்து நின்றான். ஹெலி வழி சொல்ல, பொம்மர்கள் தமது பணியைத் தொடர்ந்தன. ஹெலியும் இடையிடையே வேட்டுக்களைத் தீர்த்தபடி, வான்பரப்பில் வட்டமிட்டது.

இந்த நெருக்கடியிலும் தாத்தாவின் நினைவு அவனை நெருடியது.

'ஐயாவையும், அம்மாவையும் மண்கும்பானில் விட்டு வந்து, தாத்தாவை அழைத்துப் போக முடிந்தால் ..'

அவன் நினைவுகள் சிதறும் வகையில், தாவாடியில் வெட்டிவைத்த நெற்போர், பெருந்தீச்சுவாலை கக்கி எரிந்தது.

'சன்னம் கின்னம் ஏதேன் பட்டிருக்குமோ...?' என நினைத்தவன் அம்மாவைப் பார்த்தான் அம்மா திக்பிரமை பிடித்தவளாய், அந்த நெற்களஞ்சியம் எரிந்து சாம்பல் மேடாவதைப் பரிதாபமாகப் பார்த்தபடி நின்றாள்.

''என்ன சேரழிவப்பா... விளைந்ததெல்லாம் சாம்பலாய்ப் போச்சுது...''

ஐயா அரற்றியது கேட்டது.

ஐயாவுக்கு அஞ்ஞாவின் ஞாபகம் கூடவே வந்திருக்க வேண்டும் ''லட்ச ரூபாய்ச் சொத்து 'இப்படிக் கொள்ளை போறதெண்டால்...''

ஐயா பெருமூச்செறிந்தார்.

அவனது வெறுமை கொண்ட இதயத்தை வத்சலாவின் நினைவுகள் இப்பொழுது ஆக்கிரமித்துக் கொண்டன.

'வத்சலா என்ன செய்து கொண்டிருப்பாள். தாயைத்தூக்கிப்பறிக்க முடியாமல், தனியாகத்தான் புறப்பட்டிருப்பாளா?'

சிலுந்தா வரை போய் வர அவனுக்கு விருப்பம் இருந்தது. ஆனால், சூழலின் நெருக்குதல் அவனை விரட்டினால் அவன் தான் என்ன செய்ய முடியும்.

அவனது மன உளைச்சலை உணர்ந்தவர் போல ஐயா சொன்னார்:

''அந்தப் பெட்டையையும்... நாகபூசணியையும் நாலெட்டில் பாத்திட்டு வந்திருக்கலாம்...''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''அதெல்லாம் ஒண்டும் வேண்டாம் இந்தச் ஷெல் லடிக்கையும் குண்டு வீச்சுக் கையும்... அங்கை ஆர் போறது...''

அம்மா மறுப்புச் சொன்னாள்.

இவர்கள் மில்லடி ஒழுங் கையில் இறங்கியபோது, சுந்தரமும் தங்கம்மாவும், தங்கள் இரண்டு பிள்ளைக ளுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள். தூரத்தில் செல்லத்துரை மாமா, தான் அன்புடன் வளர்க்கும் ஜேர்சி பசுக்களையும் சாய்த் தபடி வருவதைக் கண்டான் நாகம்மாக்குஞ்சியும் பொன் னையாப்பாவும் கூடப்பின் னால் வந்து கொண்டிருந் தார்கள்.

மீளவும் மூன்று ஷெல் கோபுரத்தடி வயிரவர் கோயில் பக்கமாக விழுந்து வெடித்தன.

ஒழுங்கையால் மிதந்து, அரசடிக்கு வந்த போது, சனம் அலை மோதியது.

பெரிசும் சிறுசுமாய், வித்தியாசம் ஏது மில்லாமல் பல பக்கத்திலுமிருந்து இடம் பெயரும் ஜனசமுத் திரம். கையில் அகப்பட் டதை எடுத்துக்கொண்டு, சொத்து சுகம் எல்லாவற் றையும் இழந்த நிலையில், துயரம்படிந்த முகத்துடன், எதையோ தொலைத்துவிட் டவர்கள் போல மக்கள் அள்ளுண்டு போய்க் கொண் டிருந்தார்கள்.

'எங்கே போவது இந்த மண்ணை விட்டு. தீத்தாங் கூடலையும், நவக்கை வயல் வெளியையும், தாவாடியை யும், சிலுந்தாவில் சிலிர்த் துக் கிடக்கும் நீரையும், அஞ்ஞாவையும், ஆலடித் துண்டையும் விட்டு விட்டு எங்கே போவது. இருத்தலின் அர்த்தமிழந்த இந்த அவலம் நிரந்தரமானதா...? போன மார்கழியில் தானே மாங்கு ளத்தில் அந்தவீரம் விளைந் தது. ஓடஓட விரட்டியவர் களை இந்த மண்ணின் மைந் தர்கள் புறங்கண்டு விரட்டி னார்களே, அது இந்தப் பூமியில் நடந்த அதிசயம் அல்லவா...? இந்தப்பூமி... நம்கைவசமாகும். வாழ்வு புதிதாய் மலர்வு கொள்ளும்.

அவன் சிலிர்த்துக் கொண்டான்.

மீளவும் வத்சலா பற் றியே மனசு சாய்வு கொண் டது.

'வத்சலா வலுகெட்டி, எப்படியும் வந்திடுவாள். தாய்க்கும் ஏதாவது ஒழுங்கு செய்து போட்டு வருவாள்... இரண்டொரு நாளிலை திரும்பலாம்... திரும்பமுடி யாமல் போனால்...? தாத் தாவின் நிலை.. வத்சலா வின் அம்மாவின் நிலை...?'

அவனுக்குத் தலைசுற்றி யது மயக்கம் வரும்போலி ருந்தது.

உயிரை இப்படிப் பொத்திப் பிடித்துக் கொண்டு ஓடுவது அவனுக் குக் கேவலமாய்ப்பட்டது. அவனவன் தனது உயிரை மட்டுமே பெரிதாகப்பாது காக்கத் துடிக்கும் அவலம் அவனுக்குக் கடைந்தெடுத்த சுய நலம் மிக்கதாகவே தோன்றியது.

அம்மாவைச் சைக்கிள் பாரிலும், ஐயாவை பின்புற மாகக் கரியலிலும் ஏற்றிய வன், பெடலை அழுத்தி மிதித்தான்.

இராசையா வீதியால் சைக்கிள் திரும்பியபோது அம்மா சொன்னாள்:

''இதாலை வேண் டாம்... றோட்டாலை போவம்.''

''இது குறுக்கு வழி யப்பா..... பேசாமல் வாரும்..''
ஐயா அம்மாவை எரிச்சலு டன் அதட்டினார்.

வேலுப்பிள்ளையாரு டைய தோட்டத்தில் நீர் இறைக்கும் இயந்திர ஓசை கேட்டது.

''வேலுப்பிள்ளையன் விடமாட்டான் போலை... இந்த நெருக்கடியிலையும் தோட்டத்துக்குத் தண்ணி கட்டிறான்...''

மீளவும் ஐயாதான் கதைத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பென்சனியர் வீடு கடந்து, கந்தப்புராண மடத்தடியில் வரும் பொழுது, ஹெலிச்சத்தம் கேட்டது. கூடவே பொம் மர்கள்.

''அறுவாங்கள் திரும் பவும் வந்திட்டாங்கள் போலக்கிடக்கடா தம்பி!''

அம்மாவின் பதட்டம், சைக்கிள் ஹாண்டில் பாரில் தெரிந்தது, சைக்கிளை இவன் சமாளித்தபடி செலுத்தினான்.

பொம்மர்களும் ஹெலியும் தூரவிலகிப் போன போது, திடீரென அவர்களைச் சூழ ஆழ்ந்த அமைதி கவிந்து முடியது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு, ஒத்திசைவாய் இனிய ஓசைகள் எங்கும் கிளர்ந்து பரவின. இனங் காண முடியாது குழம்பிய நிலையில்- கானப்பறவைகளின் கார்வைகள். அதில் பெயர் தெரியாத ஒற்றைக் குருவியின் ஓசை மட்டும் சற்றுத்தூக்கலாக இருந்தது. அதில் மடிந்து கிடந்த விரக அதிர்வு இவனைத் தொட்டது.

சாட்டியைக் கடந்து. அவர்கள் வெள்ளைக் கடற்கரை வீதியை அடைந்தார்கள். மாதா கோயிலில் சனசந்தடி இருந்தது.

அம்மா ஐயாவைக்கேட்டாள்;

''இஞ்சை மாதா கோயிலிலை தங்கினால் என்னப்பா ..''

''சின்னமடுவிலை இருந்து இடம் பெயர்ந்த வேதக்கார ஆக்கள் இஞ்ச இருக்கினை .. வெள்ளி சனி எண்டு விரதமிருக்கிறனி, சாதி கீதி பாராமல் தோச்சு மெழுகேலுமே...! ''

ஐயாவின் பேச்சு இவனுக்கு அதிசயமாய் இருந்தது.

'சாதிபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாத ஐயாவே இப்படிப் பேசுவதென்றால், மனசின் அடியில் ஊறலாய்க் கிடப்பவை தானே மேலே மிதப்புக் கொள்ளும் !'

மாதா கோயிலைக் கடந்து, சுடலையை அண்மித்த போது - தீ நாக்குகள் அடங்கி, தணலாய்க் கனலும் சிதையொன்று இவனது மனதை ஈர்த்தது.

மனசு குளிர்ந்து உறைந்து போனதான நிலை.

'மரணம் தொந்தரவு தருவதில்லை. சுகமானது. மனதின் அலைபாய்தல்களோ, அவசங்களோ மரணித்தவனைத் தீண்டுவதில்லை. மரணத்தின் கருநிழலைக்கண்டு பயந்து, விலகி ஓடி எதைக்கண்டு விட்டோம். களத்தில், மரணத்தின் முகத்துக்கு நேராகவே முடிவுகளை எடுக்கும் ஒரு போராளியின் திராணி நமக்கு ஏன் ஆவதில்லை. பயந்து பயந்து ஓடும் இந்த அவலத்திலும் பார்க்க மரணம் அர்த்தமுடையது,

அந்தக்கணமே அவனுக்குச் சாக வேண்டும் போலிருந்தது. அந்தச் சிதையில் தன்னைக் கிடத்தி, தீ நாக்குகள் தழுவும் சுகத்தை அனுபவிக்க வேண்டும் போலிருந்தது.

''அம்மன் கோயிலடி தியாகராசாவின்ரை மனிசி . இரவு தான் கொள்ளி போட்டவங்கள் போலை .. தீ இன்னும் அடங்கேல்லை ''

ஐயாவின் குரல் இவனைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

பள்ளி வாசல் பக்கமும் இவர்கள் அகதிகளையே கண்டார்கள்.

மண்கும்பான் வீதியில் மக்கள் முன்னும் பின்னுமாய் முண்டியடித்துப் போய்க் கொண்டிருந்தார்கள்.

பிள்ளையார் கோயிலடியில் எள்ளுப் போட்டால் எள்ளு விழாத அளவுக்கு சனக்கூட்டம் இருந்தது.

கோயில் உள் வீதி நிரம்பி வழிந்தது. வெளி வீதியி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லும், மரங்களுக்குக் கீளாகவும் சனம் உட்கார்ந்த படிக்கு. அரசடிக்கப்பால், பண்ணை வீதியில் வடக்குச் சாய்வில், தேனீர்க் கடைகளில் ஜேஜே என வியாபாரச்சந்தடி.

இவன் கோயில் முன்பாக இருந்த பூவரச மரத்தடியில் சைக்கிளை நிறுத்தி, ஐயாவையும் அம்மாவையும் இறக்கி விட்டான். சைக்கிளை அவர்களுடன் விட்டுவிட்டு, கோயில் உள் வீதிக்குப் போனான்.

உள் வீதி எங்கும் வத்சலாவைத் தேடினான். அவளது சிலமனில்லை.

'வாறதெண்டால் இங்க தான் வருவாள் .. இல்லை, நடப்பது நடக்கட்டும் என்று வீம்புடன் வராமலே விட்டு விட்டாளோ ..'

நெஞ்சுக்கு நெருக்கமானவர்களையே விட்டுவிட்டு - ஓடி வருமளவுக்கு மரணபயம்தான் இப்படித் துரத்தியதா? சுடலை, சிதை, அதில் எரிந்து சாம்பராகிய அந்தச்சடலம், போராளி பற்றிய நினைவுகள் யாவும் அவனை இப்பொழுது புதுமனிதனாகவே ஆக்கியிருக்கிறது.

வத்சலா வரவில்லையானால் அவளையும், அவளது தாயாரையும், தாத்தாவையும் போய் அழைத்து வரவேண்டுமென அவன் தீர்மானம் செய்து கொண்டான்.

கால் வைத்து நடக்க முடியாத அளவுக்கு வீதி நிரம்பிய சனம். சன வெக்கையால் ஏற்பட்ட ஒரு வெடில். கால்களை மெதுவாக, இடைவெளி பார்த்து வைத்தபடி, வெளியே வந்தான். வெளியே வந்தவனுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது.

வத்சலா சைக்கிளை உருட்டியபடி வந்தாள். அவளது சைக்கிளின் பின்னால் அவளது தாயார்! 'ஒரு அடி தானும் எடுத்து வைக்க முடியாத அவளை, சைக்கிளில் எப்படி இவளால் '

அவன், அவளது நெஞ்சுரத்தை வியந்தபடி நின்ற பொழுது, பக்கத்தில் ஐயாவும் அம்மாவும் வந்தார்கள். நாகபூசணியை இறக்குவதற்கும் அவர்கள் தான் கை கொடுத்தார்கள்.

அந்த நெருக்கம் இவனுக்குச் சந்தோஷமாயிருந்தது. ஒட்டுதல் உணர்வைத் தந்தது.

மகிழ்ந்து போய் நின்ற இவனை நெருங்கி வந்து, வத்சலா கேட்டாள்.

''தாத்தா எங்க...?''

பதிலேதும் தராது நின்ற இவனைப் பார்த்து - முகம் சிவக்க, சற்றுப் படபடப்படைந்தவளாய் மீளவும் கேட்டாள்;

''தாத்தா எங்க?''

''நீ நினைக்கிற மாதிரி இல்லையம்மா...'' ஏதோ சொல்வதற்கு அவன் முயன்ற போது, அவள் முகத்தை வெட்டித் திருப்பிக் கொண்டாள். விம்மல் ஒலி கேட்டது. குரல் உடைந்து கரகரத்தது.

''அந்தக் கிழவனை போட்ட இடத்திலை போட்டிட்டு ஓடி வர உங்களுக்கு வெக்கமாயில்லை. உயிர் அப்படி என்ன வெல்லமா...?''

வத்சலாவின் துயரத்தை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவனால் பேச முடியவில்லை.

வீட்டில் இருந்து புறப்படும் போது உறுதிப்படாதவை எல்லாம் இப்பொழுது உறுதிப்பட்டு விட்ட நிலை. அந்த மனோ நிலை மாற்றம் அவனைப் புதிய மனிதனாகவே ஆக்கி விட்டிருக்கிறது. சற்று முன்னர் கூட வத்சலாவையும், வத்சலாவின் அம்மாவையும், தாத்தாவையும் அழைத்து வருவது பற்றித் தானே சிந்தித்தான்: இதையெல்லாம் அவளுக்கு எடுத்து விளக்க முடியுமா? அவளது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டுமாயின் அவள் உடனடியாகச் செயற்பட வேண்டும். அவன் போய்த் தாத்தாவை அழைத்து வர வேண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதுதான் அவளுக்காக அவன் இப்பொழுது செய்யக் கூடியது.

அவன் பேசாமல் சைக்கிளை எடுக்கப் போன போது, ஐயா சொன்னார்:

''நல்லா விடிஞ்சு போச்சு. பொம்மர் ஹெலி எல்லாம் சுத்துது.''

''இல்லை மாமா... தடுக்காதேங்க . அவர் போயிட்டு வரட்டும் ..''

அவளது குரலில் உறுதி தெரிந்தது.

அம்மா விக்கித்துப் போனவளாய் அவன் போவதையே பார்த்தபடி நின்றாள்.

அவள் கலங்கி நிற்பதைப் பார்த்த வத்சலா சொன்னாள்;

''பயப்பிடாதேங்க மாமி... அவருக்கு எது செய்ய வேணும், என்ன செய்ய வேணும் எண்டு நல்லாத் தெரியும், வாய்க்கை விரலை வைச்சாக் கடிக்கத் தெரியாத பாப்பா இல்லை. அதோடை இவங்கடை... இந்த ஆமின்ரை கெடுபிடி கூடிப்போச்சு பள்ளிக் கூடத்தடிச் சென்றியும் விழுந்திட்டுதாம். வீட்டுப் பக்கம் இனிப் போகேலாது. தாத்தாவும் வந்திட்டா 'ரவுண்' பக்கம் தான் நாம போக வேணும்.''

அவள் குரல் தீர்மானமாக ஒலித்தது.

''கண்ணாமடை வழியால தான் தம்பி போறான் போலை .. குறுக்கு வழிதான் . ஆனால் ஆபத்து. வெட்டவெளி.''

ஐயா சொல்லி முடிப்பதற்கு முன்னதாக, கண்ணாமடைப் பக்கமாகத் தொடர்ந்து நான்கு ஷெல் விழுந்து வெடிந்தன.

பதைத்தெழுந்த பாக்கியம் வத்சலாவைப் பார்த்துக் கூறினாள்:

''என்ரை பிள்ளை எனக்கினி இல்லைப் போலை... எல்லாருமாய் சேர்ந்து அவனை யமன்ரை வாயிலைதள்ளிப்போட்டம் போலை கிடக்கு''.

பாக்கியம் குமுறி அழத் தொடங்கினாள்.

''இல்லை மாமி உங்க பிள்ளைக்கு ஒண்டும் வராது, நீங்க கும்பிடிற தெய்வம் அவரைக் காப்பாற்றும். கவலைப்படாதேங்க. செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுறது தான் பிழை. தாத்தா பாவம், தனிச்சு-தவிச்சுப் போயிடு வாரெல்லா... இரண்டு பேரும் பத்திரமா வருவினம்...''

அவளது வார்த்தைகள் பாக்கியத்திற்கு ஆறுதல் தந்தன.

பாக்கியம் வரதன் போன திசையையே பார்த்தபடி நின்றாள்.

எங்கோ தொலைவில் பொம்மர்கள் குண்டு மழை பொழிந்து கொண்டுருந்தன. இடையில் ஹெலியின் வேட்டுச்சத்தமும் கேட்டது.

---


*இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச்சமுதாயமுமே பேரழிவை எதிர் நோக்கிய இச்சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநலவுணர்வு களையப் பெற்று சமூக உணர்வும் பிறக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப்பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலங்கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவவேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ளவேண்டும்.*

*தமிழீழத் தேசியத் தலைவர்*
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# அந்நாள் இனி வருமோ?

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

சம்பா நெல்லு வெட்டிச்
சோறாக்கி - புதுச்
சட்டியிலே பனையானைத்
தலையோடு ஆணம்வைத்து
வட்டில் நிறையப் போட்டுத்
தின்னோணும்!

குஞ்சக்கா வீட்டுக்
கோழியைப் பிடித்துரித்து
கம்பியில் கொழுவிக் காய்ச்சி
நண்பருடன் சுற்றியிருந்து
தின்னோணும்!

விடியப்பறம் ஐஞ்சுமணி மட்டும்
தம்பிலுவில் வெட்டையில
அஞ்சா நெஞ்சன்
அருச்சுனண்ட
கூத்துப் பார்க்கோணும்!

பட்டிப்பளைக்குப் போய்
பாலிப்போடி வீட்ட
முட்டி முட்டியாய்
கட்டித் தயிர் வாங்கித்
தின்னோணும்!

மாந்தீவுக் கரையில்
மட்டி பொறுக்கி வந்து
மட்டக்களப்புச்
சந்தையில் அதைவிற்று
குட்டானும் குஞ்சட்டியும்
வாங்கிவந்து
வள்ளிப்புள்ள மச்சிக்குப்
பரிசாகக் கொடுக்கோணும்!

கரவாகு வெட்டையில் இருந்து
களுவாஞ்சிக் குடிக்கு
சிவலை மாடு பூட்டி
கவலையெல்லாம் மறந்து
நெல்லேற்றிப் போகோணும்!

அரசடித்தீவு விதானையாரிடம்
'சொட்கண்' எடுத்துக்கொண்டு போய்
வில்லுக் குளத்தில் வந்துவிழும்
சில்லுத் தாராக்களை
சுட்டு வந்து ....
பிள்ளையம்மா அக்கா வீட்டில்
கொடுத்து......
குழம்புக்கறி வைத்துத்
தின்னோணும்!

கல்லாற்றுப் பூசாரியிடம்
கண்ணூறுக்குத்
திருநீறு வாங்கிவந்து
அப்பாத்தை... ..
நெஞ்சிலும் நெற்றியிலும்
அள்ளி அள்ளிப் பூசவர......
நிற்காமல் அடம்பிடித்து
வீட்டைச்சுற்றி ஐந்துதரம்
ஓடோணும்!

காரைதீவுக்
கந்தையா குஞ்சியப்புவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்முனைக்
கண்மணி மாமியும்
போரதீவுக் கோயில்... ..
திருவிழாவில்
ஊர்ச்சனங்கள் முன்னாலே
நாக்காலே இரத்தம்
சொட்டச் சொட்ட
மணிக்கணக்கில்
தீக்குளிப்பதைப்
பார்க்கோணும்!

கல்லடிப் பாலத்தில் நின்று
முகத்துவாரக் கடலலைகள்
துள்ளியடிக்கும் காட்சியினை
நள்ளிரவில்......
வெள்ளி நிலவெறிக்கும் வேளையில்
பார்க்கோணும்!

''அம்மாச்சி வீட்டுக்குப்
படிக்கப்போடா'' என்று
ஆறுமணிக்கு அம்மா சொல்ல
''எனக்கொண்ணாகா''... என்று போட்டு
ஆரப்பத்தை மதவடியில்
அமர்ந்திருந்து......
கல்முனை பஸ்......
அம்பாறை பஸ்......
போவதையெல்லாம்
கணக்கெடுக்கோணும்!

எண்ட மட்டக்களப்பே!
சொட்டிச் சொட்டித் தேனொழுக...
கட்டித்தமிழ் பேசும்
காவியமண்ணே— நான்
கிட்ட இருந்து உன்னோடு
கொஞ்சி மகிழ்வ தினியெப்போ?

மீன்பாட்டைக் கேட்டு ... வாவியடியில் ......
மேனியெல்லாம் சிலிர்க்க... நான் நின்று ...
வான் பார்க்க .. மேகமெல்லாம்......
தம்மைப்பார்க்கும்...... எனைப்பார்த்து......
தாகமுடன் மழைபொழிய .....
அதைப்பார்த்து நான் மகிழும்
அந்நாளும் இனிவருமோ?

பிறந்த நாள் மற்றும் திருமண வைபவங்களுக்கான
ஐஸிங் கேக்
சிற்றுண்டி வகைகள்
இன்னும் பல சுவைகளையும் வழங்குகின்றது

அபிராமி விலாஸ்

(பல்கலைக் கழகம் முன்பாக)
இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தமிழனுக்குத் தேவை இசையின் நான்காவது பரிமாணம்

**செஞ்சுடர்ப்பரிதி**

‘தமிழனுக்குக் காது மரத்தால் செய்யப்பட்டதா.. வேறு மொழி இசைகளைக் கேட்டுக் கேட்டு அவனுக்கு எந்த எதிர் வினையும் ஏற்படவில்லையே’ என்ற தொனியில் கல்கி ஒருமுறை கூறினாராம்.

சங்கீதத்திற்கு மொழி தேவையில்லை என்பது சிலரது வாதம். இசைக்கலைஞர் செம்மங்குடி கூட நேர்காணலில் அந்தக் கருத்தைத்தான் கூறி இருக்கிறார். இசைக்கு மொழி தேவையில்லை என்றால், வாய்ப்பாட்டு எதற்கு? வாத்திய இசையையே கேட்டுவிட்டுப் போகலாமே என்று தோன்றுகிறது. இந்த கர்நாடக இசைக் கச்சேரி முறை என்பது 150 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டது. கச்சேரியில் அமர்ந்து பாடவசதியாக பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பாணியில் அமைக்கப்பட்டுள்ள பாடல்களில் ராக ஆலாபனை, சுரம் பாடுதல் போன்ற வகைகளுக்கு இடம் கொடுத்ததால் இந்த கச்சேரி பாணி பிரசித்தமாகிவிட்டது. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற இந்தப்பாடல் அமைப்பு முறையில் சங்கீத மும்மூர்த்திகள் தெலுங்கிலும், சமஸ்கிருதத்திலும் பாடினார்கள். அவர்களுடைய சிஷ்யர்கள் தங்கள் சிஷ்யர்களுக்கு இதையே கற்றுக்கொடுத்தார்கள். இதுவே இன்று கர்நாடக சங்கீதம் என பெயர் பெற்று விளங்குகிறது. ஆனால் பாடுகின்ற வரிகள், கேட்பவனுக்கு காதில் மட்டும் உறைத்தால் போதாது, மனதிலும் வாங்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று கருதினால் இசைக்கு மொழி அவசியமாகிறது. இதை வலியுறுத்தவே நாற்பதுகளில் தமிழிசை இயக்கம் தோன்றியது. அந்த இயக்கத்தின் மாநாடுகளில் தமிழில் கச்சேரிகள் செய்யப்பட்டன. கூடவே தமிழ்ப் பண்களும் ஆராயப்படுகின்றன. ஆனால் சமீபகாலமாக தமிழிசை என்பது தீவிரம் குறைந்து, இசைக்கு மொழி அவசியமில்லை என்று கூறுகிற அளவுக்கு வளர்ந்துவிட்டது.

இராமலிங்கர் பணிமன்றமும், அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளையும் நடத்திய இசைவிழாவில் இதுபோன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. டாக்டர்.என். மகாலிங்கம் முன்நின்று நடத்திய இந்த விழாவில் பல சிறப்புகள் இருந்தன. தமிழிசைக்குப்பங்களித்த மாயவரம் மூவர், சீர்காழி மூவர், குறவஞ்சி மூவர் என்று ஒவ்வொரு காலகட்டத்தில் தமிழில் பாடல்கள் இயற்றிய பலரைப்பற்றியும் அறிமுகச் சொற்பொழிவுகளும், அவர்கள் படைத்த இசைப் பாடல்கள் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டன. சீர்காழி மூவர் என்பது ஆதிமூவர். அதாவது சங்கீத மும்மூர்த்திகளும் 150 வருடம் முற்பட்டவர்கள். அவர்கள் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர். இவர்களைப்பற்றிய ஒரு ஆய்வினை பேராசிரியை திருமதி. அலமேலு ரிஷி கொடுத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'இசை வேளாளர் குலத்தில் பிறந்த முத்துத்தாண்டவர், சிவனைத் தவிர யார் மீதும் பாடவில்லை. அறுபதுகீர்த்தனைகளும் இருபத்தைந்து பதங்களும் இவர் பாடியிருக்கிறார். சீர்காழியிலிருந்து தினம் தில்லை சென்று நடராசனை வழிபட்டவர். முத்துத் தாண்டவருக்கு தியாகய்யரைப் போல சிஷ்யர்கள் கிடையாது. அதனால் மேடைகளில் பிரசித்தம் ஆகவில்லை' என்று கூறினார். முத்துத்தாண்டவருக்கு 150 ஆண்டுகள் பின்னால் பிறந்த அருணாசலக்கவிராயர் இசை நாடகத்தின் முன்னோடியாக விளங்கினார்.

அன்று பாடிய திருப்பாம்புரம் ஷண்முக சுந்தரம், தமிழில் இவ்வளவு அற்புதமான கீர்த்தனங்கள் இருக்கின்றனவா எனப் பிரமிக்கும் வண்ணம் பாடினார். அன்று அவர் பாடிய பாட்டுக்கள் அனைத்துமே சீர்காழி மூவர் பாடல்கள்தான். 'சேவிக்க வேண்டும்' 'ஒருக்கால் சிவசிதம்பரம்' 'காலை தூக்கி' போன்ற ஜனங்களால் நன்கு அறியப்பட்ட பாடல்களை வெண்கலக் குரலில் இனிமையோடு பாடினார். வண்ண மூவர் என்பது அருணகிரியார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் போன்ற தமிழ் புலவர்களைக் குறிக்கிறது, இம்மூவரைப் பற்றியும் தமிழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் சி.பாலசுப்பிரமணியம் அரியதொரு ஆய்வுரை நிகழ்த்தினார். இதில் பாம்பன் சுவாமிகள் ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு பாடல்கள் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டார். அவருடைய பக்தர்கள்இன்றும் 'மகர தேஜோ மண்டல சபை' என ஒன்றை நிறுவி, சுவாமிகளின் பாடல்களைப் பாடி வருவதாகக் குறிப்பிட்டார். அன்று இசை நிகழ்ச்சி நடத்திய டி.வீ.சுந்தரவல்லி இந்த வண்ணமூவர் பாடல்களைப் பாடினார். திருப்புகழைப் பாடும்போது அதற்குரிய சந்தத்தைச் சொல்லிக்காட்டி விளக்கவுரையையும் நிகழ்த்தினார். குறவஞ்சி மூவர்பற்றிய ஆய்வுக்கு அறிஞர் வி.எம். சுந்தரம் தலைமை தாங்கி குறவஞ்சி மூவர்பற்றிய ஓர் ஆய்வுரை நிகழ்த்தினார். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கன்னட மொழியிலும், தெலுங்கு மொழியிலும் குறவஞ்சி இருப்பதாகத் தெரிவித்தார். ஹெய்சல நாட்டு அரசவையில் குறவஞ்சி ஆடப்பட்டதாகவும் தெரிவித்தார். குற்றாலக் குறவஞ்சி ஆடப்பட்டதாகவும் தெரிவித்தார். குற்றாலக் குறவஞ்சிக்கு முன்னர் வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி என்று ஒன்று இருந்ததாகவும், அதுவே ஆதிகுறவஞ்சி என்றும் கூறினார்.

குற்றாலக் குறவஞ்சி பற்றி சாரதா நம்பியாரூரான் அவர்களும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பற்றி பேராசிரியை டாக்டர் தாட்சாயனி அவர்களும், பாபநாச முதலியாரின் கும்பேசர்குறவஞ்சிபற்றி டாக்டர் ஞானபுஸ்பம் அவர்களும் பேசினார்.

ஏழுநாள் நடைபெற்ற இந்த இசை விழா தமிழிசைப்பாடல்கள் பற்றிய ஒரு உணர்வையும், அதை எப்படி மேடையில் நிகழ்த்துக் கலையாக வெற்றிகரமாகக் கொண்டுவரமுடியும் என்பது பற்றிய அனுபவத்தையும் அளித்தது தமிழிசை என்று சொல்கிறபோது பாடல்கள் முற்றிலும் தமிழாக இருக்கவேண்டுமென்றே எதிர்பார்க்கிறோம். பாபநாசம் சிவனை 'தமிழிசைப் பாடல்கள் இயற்றிய பெருமகனார்' என்று போற்றுவார்கள். ஆனால் அவர் எழுதிய பாடல்களில்:

''ஸத்து சிதானந்தமாய் ஸகல
உயிருக்குயிரானவள் நீ
தத்துவமஸ்யாதி மஹாவாக்கிய
தத்பர வஸ்துவும் நீ
ஸத்துவ குணமொடு பக்தி
செய்பவர் பவதாபமும்
பாபமும் அற இம்மையில் வர
ஸந்தான ஸௌபாக்கிய
ஸம்பத்தோடு மறுமையில் நிரதிசய
இன்னமும் தரும் கற்பகமே''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பது எந்த வகையில் தமிழாகும் என்ற கேள்விக்குறி எழுகிறது.

இந்தக் கேள்விக்குறிக்கு ஒரு பதில் பெரியார் திடலில் கிடைத்தது. தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒரு வார இசைவிழாவில் முற்றிலும் தமிழ்ப் பாடல்களேபாடப்பட்டன. அதோடுமட்டுமல்ல அங்கு ஆண்டவனைப் பற்றிய துதிப்பாடல்களும் விளக்கப்பட வேண்டும்என்பது ஒரு விதியாக அந்த மன்றத்தில் இருப்பதாக ஒரு குறிப்புக் கூறியது.

கழுகுமலைக் கந்தசாமி என்ற ஒரு இசைக்கலைஞர் தமிழ்ப் பாடல்களை அற்புதமாகப் பாடினார். பக்திப்பாடல்கள் இல்லாமல் என்ன பாடப்போகிறார் என்று வியந்து பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு அவர் வேதநாயகம்பிள்ளையின் சமூக சீர்திருத்தப் பாடல்கள், பாரதிதாசனின் புரட்சிப் பாடல்கள், திருச்சி தியாகராசன் இயற்றிய பாடல்கள், சிலப்பதிகாரப் பாடல்கள் எல்லாம் பாடியது காதுக்கு இனிமையாக இருந்தது. ஆனால் ஆண்டவன்மேல் துதிப்பாடல்கள் பாடக்கூடாது என்று விதி வகுத்தவர்கள்'' வீரத்துக்கு ஒரு வீரமணி, தமிழர் பாரத்தை நீக்கவந்த நல்ல மணி'' என்று மானமிகு கி.வீரமணி அவர்களைப் பற்றிப் பாடவைத்தது எதில் சேருமென்று விளங்கவில்லை. சிலநிமிடங்களில் இது கச்சேரி மேடையா, கட்சி மேடையா என்ற சந்தேகத்தைக் கொண்டுவந்துவிட்டது. இருப்பினும் இனிக்காலப் போக்கில் பெரியார் தமிழிசை மன்றம் சமூக சீர்திருத்தப் பாடல்களையும், இயற்கை வர்ணனைப் பாடல்களையும் அகப்பாடல்களையும் கொஞ்சம் கொஞ்சமாக மேடைக்குக் கொண்டுவந்து தமிழிசைக்கு வளம்சேர்க்கும் என நம்பலாம்.

இன்றைக்கு தமிழனுக்கு மூன்று இசைகள் பரவலாக,இருக்கின்றன. ஒன்று கர்நாடக இசை. இது இசைஞானம் வளமாய் இருப்பவர்கள் மட்டுமே ரசிக்கும் வண்ணம் மேல்தட்டு வர்க்கத்தின் சால்வையாக மாறிவருகிறது. இரண்டாவது சினிமாப் பாடல்கள் இது கொச்சைத்தமிழில், வார்த்தைகள் புரியாமல், காதுகிழிபடும் வாத்திய இசையோடு ''ஒட்டகத்தைக் கட்டிக் கொள்ள'' தமிழர்களுக்கு அறிவுரை வழங்கும் இசையாகிவிட்டது. இதில் தமிழ் மணமும், தமிழருடைய வாழ்க்கை அடையாளங்களும், தமிழிசையும் இல்லாமல் போய்விட்டது. ஆனால் இன்று பாமரத் தமிழனுக்கு இதுவே இசையாக அளிக்கப் படுகிறது. மூன்றாவது இசை தோத்திரப் பாடல்கள். கோயில் திருவிழாக்களிலும், காசெட்டுகள் மூலமும் லட்சக்கணக்காக விற்பனை ஆகிற, லாபம் தரக் கூடிய பண்டமாக மாறிவிட்டிருக்கிறது. இந்த மூன்றையும் தவிர, தமிழனுக்குத் தேவைப்படுவது நாலாவது இசை. அந்த இசை தமிழனுடைய வயற்காடுகளில் கிராமத்துச் சாலைகளில், ஏரிக்கரைகளில், சடங்குகளில் பாடப்படுகிற நாட்டுப்புற இசையைக் கொண்டிருக்கும். அடுத்து இனிப் புதிதாகஇதில் தோன்றவேண்டியது''கஜல்'' என்ற பெயரில் வடநாட்டிற் பிரபலமாகி இருக்கும் பாடல்கள். இந்தப் பாடல்களை எழுதிய அழகுணர்வுமிக்க கவிகள் பலர் வடநாட்டில் உள்ளனர். அவர்கள் பாட்டெழுதி அதற்கென மெட்டமைத்து, மேடையில் குரல்வளம்மிக்கவர் பாடும் போது அதைக் கேட்க ஆயிரக்கணக்கானவர்கள் கூடுகிறார். இங்கே ''லைற் மியூசிக்'' என்று அழைக்கப்படுவதே சினிமாவில் ஒருவர் பாடியதைக்காப்பியடித்து. இன்னொருவர் பாடும் நிகழ்ச்சிதான். இந்தக் கஜல் பாடல்கள் வளர்வதன்மூலம் தமிழில் நல்ல கவிஞர்கள், நல்ல குரல்வளம் மிக்க பாடகர்கள் பயன்பெறுவார்கள் என்பது திண்ணம் இந்த 'கஜல்' என்பதை 'அகப் பாடல்கள்' என நாம் அழைக்கலாம். இந்தப் பாடல்கள் மெட்டுக்கு எழுதப்படுகின்ற பாடல்கள் அல்ல. பாடல்கள் எழுதிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்பே இசை வல்லுனர்களால் மெட்டமைக்கப்படவேண்டும். நமது சமூகம் பற்றிய சிந்தனைகள், சோகங்கள், நம்பிக்கைகள், களிப்புகள், வரலாற்று நிகழ்ச்சிகள் போன்ற பல இதில் உள்ளடக்கமாக வரலாம். பொதுவாக 'காதற்பாடல்களே' இந்த அகப் பாடல்களில் அதிகமாக இடம்பெறமுடியும். தமிழிசையைப் பற்றிச் சிந்திப்பவர்கள் அதுபோன்ற ஒரு நான்காவது இசையையும் தோற்றுவிக்கவேண்டியது மிக மிக அவசியமானது.

நன்றி: சுபமங்களா, ஏப்ரல் 94



# இதயக் கொப்புளம்

## இளந்திரையன்

இன்னும் கூட
நம்பமுடியவில்லை என்னால்!
இனித் திரும்பி வரமாட்டாய் என்று
உறுதியான பின்பும்.

மோனாலிச முகமாய்
நீ வியந்த நிலவு தொங்கும்,
கடமையின் இலக்கணமாய்
நீ சொன்ன சூரியன்
வழமைபோல் வந்து போகிறான்.
உன் துப்பாக்கி உன்போல
இப்போதும் சுறு சுறுப்பாய்!...
காவலரணில் நானும்
''ரேடர்'' ஆக
தொழிற்பட்டுக் கொண்டுதானிருக்கிறேன்!
நீயும், நானும்
தாயகத்தின் இசைகளை
காவல் செய்த இடங்களிலும்
மாற்றமில்லை!

அப்படியே தானிருக்கின்றன
உன்னைத் தவிர!

இதயத்தில்
பெருங் கொப்புளமாய்க் கவலை!
சிறையுடைத்துப் பீறிடும் கண்ணீர்!

என்னைப் போல
உன்னை நன்கு புரிந்து கொண்ட
''டயறி''யின்
எழுதி மூடிக்கப்படாத பக்கங்களில்
இன்னும் ''உன்னைத்'' தேடுகிறேன்!


இனித் திரும்பிவரமாட்டாய் என்று
உறுதியான பின்பும்
காட்டுக் கத்தலாய்
உள்ளம் குளறுகிற போதும்
இன்னும் கூட
நம்பமுடியவில்லை என்னால்!

www.tamilarangam.net



# வார்த்தைகள் வலுவிழந்து போன ஒரு ஆற்றமுடியாத துயரம்

## —"நித்தி"யின் சில நினைவுக் குறிப்புகள்



நாட்டுப்பற்றாளர்
திரு. து. நித்தியானந்தன் (நித்தி அண்ணர்)

*நித்தி அண்ணர் காலமாகிவிட்டார். இல்லை; அவர் ''காலம்'' ஆகிவிட்டார்!*

*அப்படியென்ன இவரின் இழப்பில் மட்டும் இத்தனை துயரம்?*

நித்தியண்ணர் நிர்மலமான நெடுவானம். பால்மணிக் கதிர் பரப்பிய பச்சை வயலில் தலைதடவி விளையாடிய பூங்காற்று. வைகாசி விசாகத்து நிறை நிலா. இவருடன் பழகிய நினைவுகளைத் தூக்கித் தூர வீசினாலும் மீண்டும் அவை காலடியில் வந்து கைகட்டி நிற்கும். இன்று இவர் இல்லாமற் போய்விட்டார் என்று எண்ணும் போதிலெல்லாம் இமையோரம் திரைகட்டி கண்களில் நீர் துளிர்க்கும். பழகிய நாட்கள் ஒவ்வொன்றும் சருகாகிச் சொரியாது இளவேனிற் காலத்து அரசமரம் போல புதிதாக பச்சையிலை பரப்பி நிற்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லோருக்கும் நல்லவனாகவும் தோள்தரும் துணைவனாகவும் என்றும் சிரித்தபடி எப்படி ஒருவனால் இருக்க முடியும்? பயிற்சி தரவல்ல பாட்டு வாத்தியாரும் போய்விட்டார். அவர் நித்திஅண்ணர்தான்.

எமது விடுதலைப்போராட்டத்துக்கு ''நித்தி''யின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையையும், வழிகாட்டலையும் நெஞ்சார நேசித்த இவரின் பிரிவு பெரிய துயரம்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்துக்கு நித்திஅண்ணரின் மறைவு நிரப்பமுடியாத இடைவெளி.

தமிழகத்திலிருந்து மூன்றாண்டுகளுக்கு முன்னர் தமிழீழத்துக்கு வருகைதந்த இனமான எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா அவர்களின் விடுதலைப் பாடல்களை தமிழீழம் எங்கும் துல்லியமாக ஒலிக்கச் செய்ததில் நித்தி அண்ணர் காட்டிய ஆர்வமும், ஒத்துழைப்பும் அளப்பரியது. யாழ்ப்பாண முற்றவெளியில் தொடங்கி தென்தமிழீழத்து அக்கரைப்பற்று வரையும் தமிழீழம் எங்கணும் தன் சீரற்ற உடல்நிலையையும் கருத்திலெடுக்காது மருத்துவ வசதியற்ற காட்டுவழியெல்லாம் எங்களுடன் பயணம் செய்து, தன் ஒலித்துறை நிபுணத்துவத்தால் செல்லப்பாவின் தேனிசைக்கு வளம் சேர்த்தார்.

வரலாற்று விழாக்களான, நாங்கள் நடாத்திய முத்தமிழ்விழா, தமிழிசை விழா, அரங்கேற்ற விழா, பண்பாட்டு விழா அனைத்துக்கும் தன்சக்திக்கு மேலாக பணியாற்றி விழாக்களின் வெற்றிக்குத் துணையானார்.

எம்மால் வெளியிடப்பட்ட பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் அனைத்துக்கும் இவரே ஒலிப்பதிவாளராகப் பணிபுரிந்தார். இன்று உலகெங்கும் எமது விடுதலைப் பாடல்களை உயர்வானவை என்று பேசப்படுவதாயின் அதற்கு மூல காரணமானவர்களில் நித்தியண்ணரும் முக்கியமானவர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இப்படி எத்தனை எத்தனை......


இனி நித்தியண்ணர் இல்லையென்பது உண்மையாகிவிட்டது. ''இந்த மண் எங்களின் சொந்த மண்'' என்று தொடங்கி ''வெற்றி பெற்றுத் தந்துவிட்டு நீருறங்குகின்றீர்'' என்பது வரை சரித்திரம் படைத்து, சாகாத பாடல்களாகிவிட்ட நூற்றுக்கணக்கான பாடல்கள் காற்றில் கலந்து எங்கள் காதுகளில் விழும் வரை நித்தியண்ணர் நித்தியமானவர்.

**– புதுவை இரத்தினதுரை**

www.tamilarangam.net



## ஆபிரிக்க கவிதைகள்



**தமிழில்: சோ. பத்மநாதன்**

☐

புறநகர்ப்பகுதியான Soweto திறவெளிக்குப் பேர்போனது. 1976 ஜூலையில் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்திய கறுப்பினமக்கள் மீது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால், பெருந்தொகையினர் கொலையுண்டனர். சம்பவத்தில் கொலையுண்ட சிறுமி பற்றிய கவிதை இது. கடுங்காவல் தண்டனை, வீட்டுக்காவல் எல்லாம் அனுபவித்த கவிஞர் டெனிஸ் புருற்றஸ் இப்பொழுது அமெரிக்காவில் ஆங்கிலப் பேராசிரியராய் இருக்கிறார்.

☐

## ஒரு சிறுமியின் கதை

முன்பு -
பின்னிவிட்ட கூந்தல்!
மற்றையோரைப் பார்த்து
வானை நோக்கி உயர்த்திய,
பொத்திய கைகள்!
எட்டு வயதான
சிறுமியென்று சொன்னார்கள்!

பின்பு -
ஒரு சிவப்புக் கலவை,
சிதறிய மாமிசத் துண்டங்கள்,
காற்றில் படபடக்கும் கந்தைத்துணி!
பூப்போட்ட சட்டையணிந்த,
முன்னை நாள்—
சிறுமியென்று சொன்னார்கள்!

●●

☐

ஏ. என். சி. குமாலோ தென் ஆபிரிக்காவில் பிறந்தவர். இப்பொழுது ஆபிரிக்காவில் வாழ்கிறார். ஆபிரிக்கதேசிய கொங்கிரஸின் ராணுவப் பிரிவில் உறுப்பினராக இருக்கிறார். தமது சகாக்களும் தொழிற்சங்கத் தலைவர்களுமான மூவர் தூக்கிலிடப்பட்டபொழுது குமாலோ பாடிய கவிதை இது.

☐

## வஞ்சினப் பாட்டு

மினி!
வாட்ட சாட்டமான,
வலிய,
புன்னகை சிந்தும் மினி!
அவனைப் போலவே
உயிரை நேசித்த
கயிங்கா, மிக்காபா!
மூவருடைய விலைமதிப்பில்லா உயிர்கள்
பறிக்கப்பட்டு விட்டன!

அலுகோசின் சுருக்கு
கழுத்தைக் கடிக்க
எங்கள் தோழர்கள் வீழ்ந்துபட்டனர்—
வேர்வூடின் பிறிற்றோறியாவில்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிர் நழுவுவதைக் கண்டிருக்கிறீர்களா?
ஷாப்வில் மணலில்
என் அன்னை
செத்ததைக் கண்டிருக்கிறேன்!

விசாரணை நடக்கும் அறையில்
என் சகோதரன் அலறுவதும்,
யன்னல் ஊடாக,
நூறு அடி கீழே,
கொன்கிறீற்றில்,
அவன் உடல் மோதுவதும்,
கேட்கிறது!

அடிபடும் மனிதனுடைய
முகத்தைக் கண்டிருக்கிறீர்களா?
சிறைக் கூடத்தில்
அந்தச்சத்தம் கேட்கும்போது
உங்கள் இதயம் வேகமாக அடிக்கும்!

ஆனால்,
அதைவிட மோசம்
பெருமூச்சு,
இருமல்,
கீச்சிடல் - இவற்றுடன்
அல்லது ஏதுமின்றி
ஆவி நழுவுவது!

மினியும் தோழர்களும்
அந்த ரகசிய
தூக்கு மேடையில்
எப்படி இறந்தார்கள்?
—கேட்பீர்கள்
சொல்கிறேன்:

பாடிக் கொண்டு!
பெரிய, உறுதிபடைத்த மினி
அன்று சிரிக்கவில்லை!
(உதட்டில்ஒரு புன்னகைதவழ்ந்திருக்கலாம்!)
ஆனால்
எதிரியை நோக்கும் போது
கண்களில் கனல்!
நிமிர்ந்த தலைகளோடு
ஒன்றாய் - ஒற்றுமையாய்—
மினி புனைந்தபாடலைப் பாடிக்கொண்டு:
'கவனம் வேர்வூட்
கவனம் வேர்வூட்
கறுப்பன் உன்றன்
கணக்கைத் தீர்ப்பான்!''
மக்கள் அந்தப் பாட்டைத்தொடர்கிறார்கள்
மினியோடு சேர்ந்து
''கவனம் வேர்வூட்'' பாடுகிறார்கள்!

முன்னணி அகழியில்
சாவைச் சந்திக்கும்போது
மூன்று வீரர்களும்
எதிரியின் முகத்தில் அடித்தாற்போல்
கூவுகிறார்கள்:
''பழிக்குப்பழி!''
மக்கள் அதை எதிரொலிக்கிறார்கள்
''எங்கள் வீரர்களின்உயிருக்கு உயிர்!''

பிறிற்றோறிய காற்றில்
பெறுமதி மிக்க
அக்கடைசி மூச்சுக்கள்
கலக்கும் போது
நாம் சூளுரைக்கிறோம்
'பழிக்குப் பழி!''

தென்ஆபிரிக்க கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான ப்றாம் பிஷர் நினைவாக எழுதப்பட்டது இக்கவிதை. நிறவெறி அரசால் ஆயுட்காலத் தண்டனை விதிக்கப்பட்ட பிஷர் 1976 இல் சிறையிலேயே உயிர் துறந்தார். கவிதையை எழுதிய ஹியூ லெவின் தெ.ஆபிரிக்காவில் ஏழாண்டு சிறை வாசம் அனுபவித்த பின் லண்டன் போய் அங்கு பத்திரிகையாளராக இருக்கிறார்.

## இன்னொரு நாள்

மற்றெந்த நாளையும் போலத்தான்
அன்றும்
திறப்பு
காலை உணவு,கழுவுதல்,
தேய்த்தல் ?துப் புரவாக்கல்
முழுக்கு, 4 மணிக்கு இரவுணவு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூட்டு
மறுநாள் காலை கதவு திறக்கும்வரை
எந்நாளும், ஒவ்வொரு நாளும்
14 மணி நேர 'லொக் - அப்'
ஒவ்வோர் இரவும்.
காலையில்
பதினொரு சோளப் பொத்தி பறித்தோம்
பத்து எமக்கு
ஒன்று காவல் காக்கும் போவருக்கு
தோல் உரிப்பதில் அரைமணி கழிந்தது
நாமே பயிரிட்ட சோளத்தை
சமையற் கட்டுக்கு
இரவுச் சாப்பாட்டுக்கு
அனுப்புவதில் ஓர் உற்சாகம்!
இருபத்தொரு தக்காளிச் செடிகளையும்
பேணுவதில்—
அவை பசுமையாக எழுவதைப் பார்ப்பதில்
ஓர் ஆனந்தம்!
அன்றும்
மற்றெந்த நாளையும் போலத்தான்
தோட்டம், பகலுணவு
லொக் - அப்
கழுவுதல், தேய்த்தல், துப்புரவாக்கல்
முழுக்கு, 4மணிக்கு இரவுணவு
ஆனால், இரவுணவுக்கு முன்
எதிர்பாராமல்
அவன் அழைக்கப்பட்டான்
நான் சொன்னேன்:
''நல்லதோ
பொல்லாததோ
இருக்க வேண்டும்!''
ஆக,
எங்களோடு சாப்பிட அவன் இல்லை!
அவனுடைய சோளப் பொத்தியை
சிறைக்கூடத்திற்கு எடுத்துச் சென்றோம்.
நல்லதோ,
பொல்லாததோ,
போய் வந்தபின் சாப்பிடட்டும்
அன்றும்
மற்றெந்த நாளையும் போலத்தான்
இரவுணவு லொக் - அப்
தனிமை
14 மணி நேரம்
நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது

## ஆபிரிக்க கவிதைகள்



அவன் விருந்தினரைச் சந்திக்கும் அறையில்
மரச்சட்டங்கள்
4 அங்குல பேர்ஸ்பெக்ஸ்
ஒலிப்பதிவு தெளிவாக நடைபெற
சவுண்ட் போட்!
பக்கத்தில் ஒரு போவர்
மறுபுறத்தில்- வந்தவர்களோடு-ஒருபோவர்!
அதற்குப் பெயர் விருந்தினர் அறை
அவனுடைய சகோதரன்
பேர்ஸ்பெக்ஸ் ஊடாக, பேசினான்:
''இன்றுகாலைஉன்மகன்இறந்துபோனான்''
பேர்ஸ்பெக்ஸ் ஊடாக,
மரக்கூட்டுக்குள்.
அரசின் பாதுகாப்புக்குப் பங்கமின்றி,
அவன் சொன்னான்:
''உன்மகன்இன்றுகாலைஇறந்துபோனான்''
''அவன் தன்கூட்டுக்குத் தனியே
திரும்பிய போது
அவனுடைய இரவுணவு
குளிர்ந்து போயிருந்தது''
அடுத்த 14 மணி நேரம்
லொக் - அப்'
மற்றெந்த நாளையும் போல!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பண்டிதர் வீ. பரந்தாமனுடன்
# நேர்காணல்



*தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையையும் ஏற்று போராளிகளுடன் தன்னை இணைத்துக்கொண்டு விடுதலைக்காக உழைத்து வரும் இவர் தமிழ்முனி கந்தமுருகேசனாரிடம் பாடங்கற்றவர்களில் முக்கிய மாணவர். ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் இலக்கிய ஈடுபாடும் கொண்ட வீ. ப. தீவிர மொழிப்பற்றாளருமாவர். நல்ல கவிதைகளை எழுதும் மனிதாபிமானம் மிக்க இவரை எப்பொழுதும் புன்னகையுடன்தான் பார்க்கமுடியும்.*

**நேர்முகம்**
**கருணாகரன்**

● *நீண்ட காலமாக மரபில் தோய்ந்தும் புதியன தேடியும் தமிழிலக்கிய ஈடுபாடு கொண்டுள்ள தங்களின் தோற்றுவாய் மூலத்தையும் தொடர்ந்து வாழ்க்கைப்பின்னணியையும் வெளிச்சத்துக்கு விபரித்துக் கூறுங்கள்:*

☐ தென்புலோலியில் வறுமையுற்ற ஒரு குடும்பத்தில் பிறந்தேன்.
நான் இரண்டாவது பிள்ளை.
எனக்கு உடன்பிறந்தோர் ஐவர் ஆண்களும் இருவர் பெண்களுமாக எழுவராவர். தொடக்கக் கல்வியை புற்றளைப் பள்ளியில் பெற்றேன். பின்னர், காவெட்டி விக்கினேசுவராக் கல்லூரியில் ஆறாம் வகுப்பிலிருந்து கற்றேன்.
ஒன்பதாம் வகுப்பிலிருந்து ஆங்கில மொழிமூலம் கற்று. க. பொ. த. (சா. த) தேர்வில் அறிவியல் (விஞ்ஞானம்) மாணவனாகத் தேறினேன்.
எங்கள் கல்விச் செலவை எமது மூத்த மாமனார் ஏற்றுதவினார்.
மேலும் கல்வியை தொடரும் எண்ணம் குடும்ப வறுமையால் தளர்வுற்றது. பின், தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரிடம் கற்று பாலபண்டித, பண்டிதத் தேர்வுகளில் தேறினேன். பின்பு, மாணவ ஆசிரியனாகத் தெரிவு செய்யப்பட்டு 1970 ஆம் ஆண்டில் கற்பித்தல் பணியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புகுந்தேன். 1973 — 1974 இல் பயிற்சிக் கல்லூரியில் கற்று பயிற்றப்பட்ட ஆசிரியனானேன். இன்னமும் அப்பணியிலேயே தொடருகிறேன்.
நான் பிறந்தது ஒரு சிற்றூர். அப்பொழுது அது மிகவும் இயற்கை அழகு வாய்ந்ததாய் இருந்தது. மக்கள் வாழ்க்கையும் இயற்கையோடிணைந்த இயல்பு வாழ்க்கையாய் அமைந்திருந்தது. ஆங்காங்கே சுற்றமாய்ச் சூழ்ந்திருந்த பல குடும்பங்களும்



தமக்குள் நெருக்கமான உறவைப் பேணி வந்தன.
நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையில் காணப்பட்ட நயமான சூழலில் எனது சிறுவம் கழிவதாயிற்று. தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டு—தொழில் — கொண்டாட்டம் தொடர்பான பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் முதலிய வாய்மொழி இலக்கியங்களின் இன்பத்தை நாடோறும் நுகரும் சூழலில் வளர்ந்தேன். இந்தச் சூழலே எனக்கு தமிழின்பத்தை தந்து தமிழுணர்வை ஊட்டியது அது வளர்ந்து ஆழமான மொழிப்பற்றை ஏற்படுத்தியது. இம்மொழிப்பற்றே, இனப்பற்றையும் நாட்டுப்பற்றையும் என்னுள் வளர்த்தது எனலாம்.

● *தமிழ் முனி கந்தமுருகேசனாரின் மாணவரில் இன்றுள்ள சிலரில் நீங்களும் ஒருவர். அவரின் ஆளுமையையும் அவரிடம் கல்வி கற்ற அனுபவத்தையும் வெளிச்சத்துக்குக் கூறுங்கள்?*

□ தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் எங்கள்ஊரிலேயே தோன்றினார். அவருடைய 'தமிழகம்'- அவரது சிறுகுடிலுக்கு அது பெயர் - எமது வீட்டிலிருந்து அரைக்கல் தொலைவிலிருந்தது. என் தந்தையார் கந்தமுருகேசனாருக்கு சிறுவப்பருவத்திலிருந்து நண்பராய் இருந்தார். எனது கல்லூரிப் படிப்பு நின்றபோது, தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் என்னுள்ளே பெருகியது. அந்தவேளை தமிழ் நூற்பயிற்சி சிறிதே உடைய தந்தையார் பெரிதும் ஆர்வத்தோடு என்னை கந்தமுருகேசனாரிடம் போக்கி வைத்தார். இது நிகழ்ந்தது 1959 ஆம் ஆண்டிலாகும்.
கந்த முருகேசனார் 'தமிழகத்தில்' திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருந்தார். திண்ணைப்பள்ளியிலே அரிவரிப் பிள்ளைகள் முதல் முதியோர் வரை கற்றுச் சென்றார்கள். தமிழ் — எண்கணிதம்—தருக்கம்— அரசியல்— மெய்யியல்— சமூகவியல் முதலானவற்றின் அறிவு, புரட்சிகரமாகவும் உண்மையாகவும் கற்பிக்கப்பட்டது. வெண்டாடி அசைய — களங்கமற்ற— கூரியபார்வையோடு, திண்ணையிலிட்ட தடுக்கின் மீது (சிறுபாய்) 'சப்பாணம்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொட்டி (கால்மடித்திருக்கும் ஒரு
வகையான இருப்பு) இரண்டு கைகளால்
மடித்த காலைப் பிடித்துக்
கொண்டோ இருபக்கங்களிலும் கைகளை
ஊன்றிக்கொண்டோ இருக்கும்
தோற்றம், மெய்யியல்
முனியை — தவத்தோரை நினைவூட்டும்.
அவர் ஒரு இருக்கை முடவர்;
அவருடைய பதினான்காம் அகவையிலிருந்து
அக்கோலவிருக்கைதானாம்.
அறுபதை அடைந்த போதும்
முகத்தில் குழந்தைமை குன்றாத
ஒளி குழைந்திருந்தது.
தோற்றத்தாலும் பார்வையாலும்
உண்மையோடு கூடிய இனிய பேச்சாலும்
எவ்வெவரையும் ஒடுங்கச் செய்யும்
ஆளுமை இயற்கையாகவே
அமைந்து விட்டது.
அவர் தெய்வ நம்பிக்கையற்றவர் -
சிந்தனையாளர் - சீர் திருத்தவாதி -
பொதுவுடமைவாதி -
நாவன்மையுமுடையவர்.
தூய தமிழ் அவர் உயிர் மூச்சு.
தமிழுக்கு தொண்டு செய்வதே
தம்வாழ்விலக்கு என்று வாழ்ந்தவர்.
நல்லை நாவலர் மீது
கோவையொன்றைப் பாடியுள்ளார்.
நான் அவரிடத்துச் சென்ற அன்றே அவருக்கு
ஆட்பட்டுவிட்டேன். திண்ணைப்
பள்ளியிலே எனது தமிழ்க்கல்வி, குருகுலக்
கல்வி முறையாக மலர்ந்து சிறந்தது.
ஓராண்டு கற்று பாலபண்டிதத் தேர்விலும்
மேலும் இரண்டாண்டு கற்று
பண்டிதத்தேர்விலும் தேறினேன்.
அவர் இறக்கும்வரை அவருடனேயே
குருகுல வாழ்வு வாழ்ந்தேன்.
என்னுள்ளே முன்னமே முளையிட்ட
தமிழுணர்வு, புரட்சிகரமான எண்ணங்கள்
முதலியன, அக்காலத்திலே தான்
ஆழமாக வேரோடி வளர்ந்து
மலர்ந்து உறுதிபெற்றன என்பேன்.
அவரிடம் பாடம்
கேட்டதால் பெற்ற
அறிவை விட,
அவருடன் வாழ்ந்ததால் பெற்ற அறிவே
மிகுதியாகும். அவர் தந்த
அடிப்படை அறிவின் ஒளியிலே,
பல்துறைகளிலும் நானாகத்
தேடிக்கொண்ட அறிவு இன்னும்
பெரிதாகும். எனக்கு
இன்றுள்ள, அறிவு - திறன்—
மனப்பாங்கு— ஆளுமை
ஆகியவற்றின் கணிசமான பகுதி,
எனது குருவின் அருளினால் என்னை
அடைந்ததே.

● *தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நெஞ்சார நேசிக்கும் நீங்கள் பணியாலும் இலக்கியப் படைப்புகளாலும் தமிழ்ழப் போருக்கு அணி சேர்த்து வருகின்றீர்கள். இந்த உணர்வு உங்களுக்கு ஏற்பட்ட விதத்தையும் பணியையும் கூறமுடியுமா?*

□ எனது பன்னிரண்டாவது அகவையில்
ஈ. வே. ரா பெரியார், பேரறிஞர் அண்ணா
ஆகியோரின் சமுதாய சீர்திருத்த
கருத்துக்களினால் பெரிதும்
கவரப்பட்டேன். அக்காலம் இலங்கையில்
'பொதுவுடைமை' அரசியற்
கருத்துக்கள் என்னை ஈர்த்தன.
அக்காலத்திலிருந்து 1970ஆம் ஆண்டு வரை
பொதுவுடைமைக் கட்சி ஆர்வலனாக
இயங்கினேன். அதேவேளையில்
அக்கட்சியால் இரண்டாம்
நிலையில் கருதப்பட்ட
மொழிப்பற்று இனப்பற்றுகள், பொருளியக்
கோட்பாட்டு உணர்வுகட்கு சமமாக
அல்லது சற்று முனைப்பாக என்னுள்ளே
வளர்ந்து வந்தன.
56ஆம் ஆண்டில் தனிச்சிங்கள ஆட்சி
மொழிச் சட்டம் வந்தபோதும் 58 இல்
இனக்கலவரம் நடந்தபோதும்
பேரினவாதம் வளர்ந்தபோதும்
இடது சாரிகள் நடந்து கொண்ட
முறைகள், அக்கட்சியினர் மீது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறுப்பை உண்டாக்கின.
'ஐக்கிய இலங்கையில் இனங்களின்
சமத்துவம்' என்ற மாயத்திரையை
கிழித்துவிட்டன.
எனது விடுதலை உணர்வு
கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது.
எழுபதிலிருந்து பொதுவுடைமைக்
கட்சிமீது வெறுப்புற்றிருந்த நான் 1972 ஆம்
ஆண்டில் 'புதிய குடியரசு'
அமைப்பு நிறைவேற்றப்பட்டதும்
முற்றாகவே அக்கட்சியினின்றும்
(பொதுவுடைமைக் கோட்பாடுகளினின்றும்
அல்ல) ஒதுங்கிவிட்டேன்.
1974 வரை தமிழ் இளைஞர்
குழுக்கள் பால் என் கவனம்
திரும்பியது. 1974 ஆம் ஆண்டு
'மார்ச்' மாதம் என்று
நினைக்கின்றேன். திரு. பொன். சிவகுமாரன்
தன் தோழர்கள் இருவருடன் வந்து
என்னை என் வீட்டில் சந்தித்தார்.
அப்பொழுது தமிழர்
ஆயுதப்போராட்டத்தில் ஒரு நம்பிக்கை
ஒளிமின்னலிட்டது. இந்த 1974 ஆம்
ஆண்டிலேயே புதிய புலிகள்
இயக்கத்தை இனம் கண்டு கொண்டேன்.
அப்போது அது தலைமறைவியக்கமாக
இருந்தது அதன் தலைவரை
அறியமுடிவில்லை. 1976 இல்
தலைவரை பெயரளவில்
அறிந்துகொண்டேன்.
அப்பொழுதிருந்து இயக்கத்தின்
வளர்ச்சிக்கும் போராட்டத்திற்குமாக
பலவழிகளில் உழைத்து வருகிறேன்.
நான் மூன்று பத்தாண்டுகட்கு
மேலாக எழுத்துலகில் உலவி
கவிதை - கட்டுரை - நாடகம் ஆகிய
வடிவங்களில் எழுதிவந்திருக்கின்றேன்.
என் எழுத்துக்களின் கருப்பொருள்களாக
தமிழ் - தமிழர் விடுதலை - அரசியல் - சமுக
சீர்திருத்தம் என்பனவே
அமைந்துள்ளன. தொடர்ந்தும்
தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர்
போராட்டம் வெல்வதற்கும்
எழுதியும் பணிபுரிந்தும்
வருகிறேன். தமிழும் தமிழராட்சியும்
என் உயிர்த் தாகம்.

*தமிழீழத்தில் மண்விடுதலை - பொருண்மிய விடுதலை - பெண் விடுதலை சமுக விடுதலைக்கான தேவையும் சூழலும் நிற்காலம் அமைந்துள்ளன. ஆகவே, இலக்கியப் படைப்பாளிகள் இக்காலத்தில் விடுதலை இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும்.*


● *தமிழீழ இலக்கிய வளர்ச்சி பற்றியும் விடுதலை இலக்கியங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்றும் நீங்கள் கருதுகின்றீர்கள்?*

☐ தமிழீழ இலக்கியங்களில்
அறுபதுகளிலிருந்து வளர்ச்சிப்போக்கு
காணப்படுகிறது. குறிப்பாக
சிறுகதைகளில் இந்த வளர்ச்சி
விளங்கத் தெரிகிறது.
தொடக்கத்தில் எல்லாவகை
இலக்கியங்களும் தமிழ்நாட்டு
இலக்கியப் போக்கையே பின்பற்றி
எழுந்தன. எனினும் சில காலத்தில்

www.tamilarangam.net



தம் போக்கை மாற்றி தனித்தன்மையுடன் வளர்ச்சியடைந்து வருகின்றன. தமிழ்நாட்டு இலக்கியங்களில் பெரும்பாலானவை. பொழுதுபோக்குத் தன்மையும் கற்பனைச் சுவையின்பமும் வணிக நோக்கும் கொண்டவையாகவே உள்ளன. தமிழீழ இலக்கியங்கள் பெரும்பாலானவை சமூக முன்னேற்ற இலக்கும் உண்மையும் கொண்ட ஆக்க இலக்கியங்களாகத்



திகழ்கின்றன; ஆனால், பின்னவை மக்கள் உள்ளத்தை வென்றெடுப்பதற்கு காலம் செல்லும். விடுதலை இலக்கியங்கள், அவை எந்த வடிவத்தில் தோன்றினாலும் எந்த விடுதலை பற்றிப் பேசினாலும் அவ்வச்சூழலும் தேவையும் உள்ள இடத்திலேயே தோன்றமுடியும். விடுதலை இலக்கியங்களைக் கற்பனையில் படைக்க முடியாது. ஒருகால் முயன்று படைத்தாலும் அவற்றில் உண்மையிராதாதலால் நம்பகத்தன்மையும் இராது. மக்கள் அவற்றை நாடார். தமிழீழத்தில் மண்விடுதலை பொருண்மிய விடுதலை - பெண் விடுதலை சமூக விடுதலைக்கான தேவையும் சூழலும் தற்காலம் அமைந்துள்ளன. ஆகவே, இலக்கியப் படைப்பாளிகள் இக்காலத்தில் விடுதலை இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும். விடுதலை இலக்கியங்கள், உடனடியாக மக்களை எழுச்சியடைச் செய்தும் எதிர்காலத்தில் வரலாறாக நின்று நிலைக்கத்தக்க வகையிலும் அமைதல் வேண்டும். வடிவங்களைப் பொறுத்த மட்டில், எந்த வடிவம், மக்களை ஈர்க்குமோ - எளிதில் சென்றடையவும் புரியவும் செய்யுமோ அந்த வடிவங்களில் படைக்கலாம்.

● *மரபுக்கவிதை புதுக்கவிதை என்ற வகைப்படுத்தல் இன்றுவரை தொடர்கிறது. தாங்கள் இரு வகைக் கவிதை வடிவங்களையும் ஏற்றுக்கொண்டவர் என்பதை நாமறிவோம். எனவே கவிதை பற்றியும் இந்த வகைப் படுத்தல் பற்றியும் தங்கள் கருத்து என்ன?*

□ கவிதை என்பது ஒரு கருத்துப்பொருள். காட்சிப் பொருளைச் சுட்டி விளக்குவது போல விளக்க முடியாது. அது சொன்னயம், பொருணயம், ஓசைநயம், அணிநயம், உணர்ச்சிநயம், யாப்புநயம் ஆகியவற்றின் கூட்டுப்பண்பாய் அமைந்தது. இப் பண்புகளை ஒன்று சேர்ப்பதற்காகவே மாத்திரை (எழுத்து) அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய வரையறைகளை சான்றோர் வகுத்தனர். அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்னும் நால்வகை ஓசைகளின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிப்படையில் முறையே அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்களை வரைந்து கொண்டனர். இவற்றின் வரையறை வேறுபாடாக தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவினங்கள் பிறந்தன. அவையும் ஓசை வேறுபாடுகளைப் பெற்று பலவகையாகும். தொல்காப்பியர், தொடை வகையை பதின்மூவாயிரத்து எழுநூற்றெட்டாக கண்டு மேலும் 'தெரிந்தனர். விரிப்பின் வரம்பில பல்கும்' என்றும் கூறிப்போந்தார். இதிலிருந்து ஒன்றை உய்த்துணரலாம்: முன் சொன்ன வரையறைகள் வேறுபடக்கூடியன என்பது. கவிதைப் பண்புகள் மாற்றமடையா; ஆனால், வரையறைகள் மாற்றமடையும் தன்மையன. மாறாத கவிதைப் பண்புகளையும் மாறுந்தன்மையனவாகிய வரையறைகளையும் மரபுகள் என்று கூறிவருகின்றனர்.
இன்று சிலர், வரையறைகளில் மாற்றம் செய்தும், பலர், கவிதைப் பண்புகள் வரையறைகள் இரண்டையும் கைவிட்டும் 'புதுக்கவிதைகள்' என்று எழுதி வருகின்றனர். வரையறை மாற்றம் பெற்றவையே புதுக்கவிதை எனலாம். மற்றையது கவிதையே அன்று கவிதைப் பண்புகள் இல்லாமல் வரையறை மட்டும் பேணப்பட்டு எழுதப்படுவதும் கவிதைப் போலியே. இதையே 'கல்லாதான் கற்ற கவி' என்று ஔவையார் கூறினார்.
ஆழமான பார்வையில் மேற்சொன்ன புதுக்கவிதையும் மரபுக்கவிதைகளிலேயே அடங்குவதை உணரலாம்.
புதுக்கவிதை சிலவற்றுள் பேச்சோசை நடை பயின்று வருகின்றது.
கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் புதுக்கவிதைகளிலே மேற்படி பண்பு மிகுந்திருப்பதைக் காண்கிறேன்.
இது சான்றோர் சொன்ன உரைச் செய்யுள் (உரைப்பாட்டு) வகையைச் சார்ந்துள்ளது.

மொழிக்கு பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இருவகை வழக்குகள் உள்ளன. அவையும் உரைநடை செய்யுள்நடை என இரு நடை பெற்றியங்கும். செய்யுள்நடை தழுவிய உரை நடையும் உண்டு. இதனையே சான்றோர் உரைச்செய்யுள் என்றனர். இது தற்காலத்தில் 'வசன கவிதை' என்றும் 'கவியுரை' என்றும் கூறப்படுகிறது.
கவிஞர் இ. முருகையன் அவர்கள் கவியரங்குகளில் உரைச்செய்யுளைக் கையாண்டு வருவதை கண்டிருக்கிறேன். மரபுகளை நன்குணர்ந்தவர்களே புதுக்கவிதையிலும் வெற்றி பெறுவதை காண்கின்றேன். இவ்வேளையில் என்னை யாரும் மரபுகளிலிருந்து விடுபட விரும்பாதவர் என்று கணித்து விடக்கூடாது. நான் மற்றவர் பலரும் விடுபட முடியாத தெய்வ நம்பிக்கை மரபு, மூடநம்பிக்கைகள், சமுதாயச் சீர்கேடுகளிலிருந்தே உள்ளத் தூய்மையுடன் விடுபட்டவன். ஆனால், தமிழர்க்கு மேன்மை தரும் உயர் விழுமியங்களை 'பழையமரபு' என்னும் பெயரால் ஒதுக்கிவிடும் கண்மூடித்தனத்தையும் எதிர்ப்பவன் என்பதுதான் உண்மையாகும்.

ஏனையோரை இகழமாட்டேன். எல்லோரும் எழுதட்டும். காலப்போக்கில் சிலரேனும் கவியாற்றல் வாய்க்கப் பெற்று, மக்கள் நயக்கும் நல்ல கவிதைகளைப் படைப்பார்கள் என நம்புகிறேன்.

● *சங்க கால இலக்கியத்திலும் இலக்கண அறிவிலும் தங்கள் புலமையை நாங்கள் அறிந்துள்ளோம். எனவே இந்த மரபு*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*சார்ந்த அறிவு புதியவர்களுக்கு எப்படி வலுச்சேர்க்கும் என்பதைக் கூறமுடியுமா?*

☐ மொழி - இன விழுமியங்கள் மரபைப் பேணுவதன் மூலமே புதிய தலைமுறைகளை வந்தடைகின்றன. சங்ககாலத் தமிழர்வாழ்க்கையின் உயர்விழுமிங்களை இன்றும் நாம் விருப்புகிறோம். புதைந்துபோன ஒரு வீர மரபை புதுப்பித்துக் காண்பதே எங்கள் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களினதும் உயிருந்தலாக இருக்கிறது. பண்டைக்கால விழுமியங்களை அறிந்து எழுச்சி பெறுவதன் மூலம், விடுதலைப் போராட்டத்திற்கு வலு உண்டாகும்.

எங்கள் மரபுகளாய் உள்ள தேசிய விழுமியங்களே தமிழினத்திற்குத் தனிச் சிறப்பையும் உலகத்தில் முதன்மையையும் தருவன. அதே வேளை, புதிய அறிவியல்தொழில்நுட்ப அறிவையும் நாம் பெருக்கிக் கொள்ளல் வேண்டும். அந்தவகையிலே தான் எனது மரபு சார்ந்த அறிவு, புதியவர்க்கு வலுச்சேர்க்கும் எனக் கருதுகிறேன்.

● *எமது விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைந்து நிற்கும் தாங்கள் விடுதலைப் போரின் பால் ஈடுபாடு கொண்டதற்கான காரணங்களையும் அதனால் உங்களுக்குள் ஏற்படும் உணர்வுகளையும் கூறுங்கள்.*



☐ நான் பிறந்து வளர்ந்த சூழல், எனக்குத் தமிழுணர்வைத் தந்ததென்று முன்பே கூறினேன், சிறுவயதிலேயே தமிழ் இலக்கியங்களை படிக்கலானேன். தமிழின் சிறப்பையும் தமிழர் வரலாற்றுப் பெருமையையும் அறிய அறிய தமிழினம் மீண்டும் அத்தகைய உயர் நிலையை அடையவேண்டும்; ஆளவேண்டும் என்ற உந்தல் என்னுள் எழுந்து வளர்ந்து கொண்டிருந்தது. சொந்த உரிமையையும் 'சுதந்திரத்தையும் நுகர, பிறர் இயைபுக்காகக் காத்திருக்கும் இயலாமையை – அடிமைத்தனத்தை மிகவும் வெறுத்தேன். இயல்பாகவே போர் விருப்பம் (போருக்கம்) உடையவனவாய் இருந்தேன். அதனால் இலக்கியங்களில் போர் கூறும் பகுதிகளை சுவைத்துப் படிப்பேன்; போராட்டம், போர்ச்

www.tamilarangam.net



செய்திகள் பற்றிக் கூறும் நூல்களையும்
கட்டுரைகளையும் விரும்பிப்
படித்து வந்தேன். இந்தப் போர்க்
கலையிலே 'கெரிலா' போர்க்கலை
எனக்கு மிகவும் பிடித்தது. இக்கலை
பற்றி, ''பண்டைக்கால போர்
முறையும் தற்காலப் போர் முறையும்''
என்னும் தலைப்பிலே 1985 ஆம் ஆண்டில்
'ஈழநாடு' ஏட்டில் ஒரு கட்டுரை கூட
எழுதியிருக்கிறேன்.
இந்த இயல்பூக்கங்கள் காரணமாக
எக்காலத்தும் போராடுவோர்
பக்கமாகவே நின்று வந்துள்ளேன்.
அதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள்
இயக்கத்தின் தொடக்க காலத்திலேயே
அதன் ஓர் ஆர்வலனாக
இணைந்துவிட்டேன்.
எங்கள் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன் அவர்களின்
அருங்குணங்கள் - குறிப்பாக
அஞ்சாமை - நேர்மை - அன்பு -
அறிவு - ஊக்கம் என்னும் பண்புகள்
என்னை மிகவும் கவர்ந்தன. அவர்,
தமிழர் தவத்தால் அரிதிற் பெற்ற
ஒரு ''திருமாமணி''.
என் சாவுவரை - என்னால் இயக்கத்திற்கு
உதவமுடியாத இயலாமையுற்ற
காலத்தும் - அவர் அன்பைப் பெற்று
இருக்கவே விரும்புகின்றேன்.
தமிழ் வெல்லும்!

## தாயென அணைத்து
## எம்மைத் தழுவிய காற்று

முன்னைநாள் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தரும்
எமது மண்ணின் கல்விப் புலத்துக் கனவானும்
எளிமையே வாழ்வாகிய இனியனுமாகிய

## பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு
## எமது நெஞ்சம் நிறைந்த அஞ்சலி

நெடியஉன் உடலும்; வெள்ளை
நெஞ்சுடன் விரிந்த நோக்கும்
அடிமுடி அறியா உந்தன்
அறிவுடன் உழைப்பும்; எங்கள்
விடியலுக் கான போரில்
விருப்புடன் இணைவும் கொண்ட
எடுபிடி எதுவும் அற்ற
எளிமையே! போய்விட் டாயா?

பேர்துரை ராசா என்று
பெரியது; துணைவேந் தென்று
நீயிருந் தரசு செய்து
நின்றதும் பெரிது; உன்னை
ஆர்வணங் காதார் இன்று
அத்தனை பேரின் கண்ணும்
நீர்வழிந் தோட மூச்சை
நிறுத்தியேன் துயிலு கின்றாய்.

— வெளிச்சம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடவுளின் மரணம்

## பிரம்மஞானி

அவர் ஒரு வித்தியாசமான மனிதர். அவர் வித்தியாசமாகச் சிந்தித்தார். வித்தியாசமாக எழுதினார். அவரது எழுத்து எல்லோரையுமே அதிர வைத்தது.

காலம் காலமாக மனிதன் கண்டுவந்த கனவுகளையும், கட்டி எழுப்பிய நம்பிக்கைக் கோட்டைகளையும், அறமாக வரித்துக்கொண்ட நெறிகளையும், மனித விழுமியங்களாக போற்றிவந்த உன்னதங்களையும் - எல்லாவற்றையுமே, ஈவிரக்கமின்றிச் சாடினார். எல்லாமே அபத்தம் என எள்ளி நகையாடினார்.

'அன்பு என்பது ஒரு பெரிய பொய். பயத்தில் பிறக்கும் கோழைத்தனமே அன்பு எனப்படுகிறது.'

'நீ பலவானாக இருந்தால் மற்றவனை நேசிக்கமாட்டாய். நீ பலவீனனாக, கோழையாக இருக்கும்போதே மற்றவனை நேசிக்கிறாய்.'

'கிறீஸ்தவமும் பௌத்தமும் அன்பு மார்க்கத்தைப் போதித்து அடிமைவாதத்தை வளர்த்துவிட்டுள்ளன.'

'பௌத்தம் ஒரு சூன்யவாதம். வெறுமையையும் விரக்தியையும் அது விதைத்து வருகிறது.'

'கிறீஸ்தவம் ஒரு அடிமைவாதம். இரண்டாயிரம் ஆண்டுகளாக, மனிதனின் ஆன்மாவை, அது சிலுவையில் அறைந்து வைத்திருக்கிறது.'

'மனிதன் ஒரு மிருகம். அவனை ஒரு தெய்வமாக மாற்ற முனைகிறது மதம்.'

'மிருகத்தனத்தில் ஒரு இயல்பான அழகு இருக்கிறது. ஆக்ரோஷம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. கொடூரம் இருக்கிறது. மனித மிருகத்தின் இந்த சிறப்பான பண்புகளை சிதைத்துவிட்டு, பணிவையும், சாந்தத்தையும், கோழைத்தனத்தையும் போதிக்கும் அறநெறித் தத்துவங்களை அழித்தொழிக்கவேண்டும்.'

'எதிர்காலம் மகா மனிதனுக்கு (SUPER MAN) உரியது. அவன் எதற்கும் துணிந்தவனாகவும் வீரனாகவும் இருப்பான். அவனிடம் அன்பும், அறமும், காருணியமும் அறவே இருக்கமாட்டாது. அவன் ஈவிரக்கமற்றவனாக இருப்பான். பலவீனர்களையும், கோழைகளையும், முட்டாள்களையும் சகித்துக்கொள்ளமாட்டான். அவர்களை அழித்தொழிக்கவும் தயங்கமாட்டான். இந்த மகா மனிதர்களின் ஆட்சியில்தான் மானிடம் முன்னேற முடியும்.'

இப்படி எல்லாம் அவர் எழுதினார்.

அவரை ஒரு பைத்தியக்காரன் என்றார்கள். மனித குலத்தின் விரோதி என்றார்கள். கடவுளைக் கொலைசெய்த மகா பாவி என்றார்கள்.

அவரது எழுத்துக்கள், சாத்தானின் சிந்தனைகள் என இழிவுபடுத்தப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் மனம் முறிந்து இறந்துபோனார். ஆனால் அவரது சிந்தனைகள் செத்துவிடவில்லை. நாசிசவாதிகளிலிருந்து இருப்பியல்வாதிகள்வரை பலர் அவரைத் தமது ஆதர்ஷ குருவாக வரித்துக்கொண்டனர்.

யார் இந்த மனிதர்?

அவர் தான் நீச்சே (NIETZSCHE.) ஜேர்மானிய அறிஞர். தத்துவப்பேராசிரியர். 1844 ம் ஆண்டு பிறந்தார். 1900 ல் மடிந்தார். சாராம்சத்தில் அவரது தத்துவார்த்த எழுத்துகள் மானிடத்திற்கு ஒரு உண்மையை இடித்துரைக்க விரும்புகிறது. ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறது. அந்தச் செய்திதான் என்ன?

மனிதன் நம்பிக்கைகளை மூட்டை கட்டி, தாங்கொணாப் பளுவாக, தனது சக்திக்கு மிஞ்சிய சுமையாக, சுமந்து செல்கிறான். சதா பொய்களைப் புசித்து போலி வாழ்க்கை வாழ்கிறான். இல்லாததொன்றைத் தேடி அலைகிறான். அர்த்தமற்ற வாழ்வில் அர்த்தமிருப்பதாக எண்ணுகிறான். அவன் சதா தேடி அலையும் அது, அவன் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் அது, அவனது வாழ்வுக்கே அர்த்தம் கொடுக்கும் அந்த மாயப் பொருள், அவனைப் படைத்து காத்துவருவதாக அவன் கற்பிதம் பண்ணும் அந்தக் கடவுள், எப்பொழுதோ செத்துவிட்டார். இந்த இழவுச் செய்தியையே மனித குலத்திற்கு பறையறைந்து சொல்ல விரும்புகிறார் நீச்சே.

*THUS SPAKE ZARATHUSTRA* என்ற அவரது நூலொன்றில் வரும் கீழ்க் கண்ட பந்திகள் இந்தச் செய்தியை இலக்கியச் சுவையோடு சொல்கின்றன.

''சாரதுஷ்ரனுக்கு முப்பது வயதானதும், துறவற வாழ்வைத் தழுவிக்கொள்கிறான். வீடு துறந்து காடு செல்கிறான். பத்தாண்டு காலம் கடும் தவம் இருக்கிறான். தனிமையில், அமைதியில் ஆன்மீகத் தேடலை நடத்தி முடிக்கிறான். ஞானோதயம் பெறுகிறான்.

அன்றுகாலை, என்றுமில்லாதவாறு அவனது மனதில் ஒரு புத்துணர்வு. மனித குலம்மீது மனம் திரும்பியது. அந்த இருண்ட குகையைவிட்டு வெளியே வந்தான். உதய சூரியன் அவனை வரவேற்றது.

'கதிரவனே, உனது ஒளியில் உயிர் வாழும் உலகத்தோர் இல்லாதொழிந்து போனால் உனக்கு மகிழ்வுமில்லை, மகிமையுமில்லை. பத்தாண்டு காலமாக, தினமும் எனது குகை வாசல் வந்துபோகிறாய். உன்னை ஆவலுடன் தரிசித்துவரும் நானும், இந்த வன விலங்குகளும் இல்லாதுபோனால், வெளிச்சத்தை கொடையாக வழங்கும் உனது பணியும், முடிவில்லாத, சலிப்பில்லாத உனது பயணமும் அர்த்தமற்றுப் போய்விடும்.'

'தேவைக்கு அதிகமாக தேனைச் சேமித்து சலித்துப்போன ஒரு தேனீ போன்று ஞானத்தின் பழுவை நான் சுமந்து நிற்கிறேன். நான் சேமித்துவைத்திருக்கும் ஞானத்தேனை உலகத்தாருக்கு பகிர்ந்தளிக்க விரும்புகிறேன். மனிதர்களிடம் சென்று நான் மீண்டும் மனிதனாக வாழ விரும்புகிறேன்.'

இந்தப் பிரதிக்ஞையுடன் சாரதுஷ்ரன் தனது வன வாசத்தை முடித்துக்கொண்டான். மலையிலிருந்து இறங்கி கிராமம் நோக்கி நடந்தான். மலையடிவாரத்தில் காட்டு வழியே சென்றுகொண்டிருந்தபோது அந்த வயோதிப முனிவனைச் சந்தித்தான். அந்தத் துறவி சாரஷ்துரனை இனம்கண்டு கொண்டான்.

'சாரதுஷ்ரா, நீ தனிமையில் வாழ்ந்து தவமிருந்து, ஞானோதயம் பெற்றுள்ளாய். விழிப்புநிலை அடைந்துவிட்டாய். மனிதர்களோ சதா தூக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களிடம் உனக்கு என்ன வேண்டியிருக்கிறது.' என்று கேட்டார் அந்தத் துறவி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'நான் மனித குலத்தை நேசிக்கிறேன்.' என்றான் சாரதுஷ்ரன்.

'மனித குலம்மீது அளவுகடந்த பாசம் கொண்டதால் அல்லவா நான் வனவாசம் சென்றேன். நான் இப்பொழுது கடவுளை நேசிக்கிறேன், மனித சமூகத்தை அல்ல. மனிதன் தூய்மையற்றவன். முழுமையற்றவன். மனித குலம்மீது அன்பு செலுத்தினால் அது என்னை அழித்துவிடும்'' என்றார் முனிவர்.

'நான் மனித குலத்திற்கு ஒரு நன்கொடையை கொண்டுசெல்கிறேன்' என்று பதிலளித்தான் சாரதுஷ்ரன்.

'மனிதர்களுக்கு எதையும் கொடுத்து விடாதே. வேண்டுமென்றால் அவர்களிடமிருந்து எதையாவது பிடுங்கிக்கொள். மனிதர்கள் துறவிகளை சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். நாம் கொடுக்க வந்துள்ளோம் என்றால் நம்பமாட்டார்கள். வீதி வழியே, தனிமையில், எமது காலடியோசை இரவின் மௌனத்தைக் கலைக்கும்போழுது, படுக்கையிலிருந்து அதை உற்றுக்கேட்கும் மனிதர்கள் எவ்வாறு எண்ணுவார்கள் தெரியுமா? இந்தத் திருடன் எங்கே போகிறான், என்று. ஆகவே, சாரதுஷ்ரா, இந்தக் கெட்ட மனிதர்களைத் தேடிப் போகாதே, இந்தக் காட்டில் தங்கியிரு. மனிதர்களைவிட இந்தக் காட்டு மிருகங்கள் மேலானவை. மிருகங்களை நாடிப்போ. என்னைப் போல உன்னால் சீவிக்க முடியாதா, மிருகங்களில் ஒரு மிருகமாக, பறவைகளில் ஒரு பறவையாக.' என்றார் துறவி.

'முனிவரே, இந்தக் காட்டில் இத்தனை காலமும் என்ன செய்து வருகிறீர்கள்.'

'நான் பாட்டுகள் இயற்றுவேன், பாடுவேன். நான் பாட்டுகள் புனையும்போதும் பாடும்போதும், சிரிப்பேன், அழுவேன், எனக்குள் சும்மா முணுமுணுப்பேன். இவ்வாறு, நான் கடவுளைத் துதிபாடுகிறேன். நான் கடவுளைக் காதலிப்பவன். எனது பாட்டில், சிரிப்பில், அழுகையில், முணுமுணுப்பில் - எல்லாவற்றிலும், நான் கடவுளைத் தரிசிக்கிறேன், வணங்குகிறேன். அது இருக்கட்டும், எமக்காக, மனிதர்களுக்காக என்ன நன்கொடை கொண்டுவந்திருக்கிறாய், என்று கேட்டார் அந்த முனிவர்.

'நான் உங்களுக்கு எதையும் கொடுக்கவும் வரவில்லை. உங்களிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்வுளம் விரும்பவில்லை' என்று கூறிவிட்டு அங்கிருந்து விரைந்தான் சாரதுஷ்ரன்.

அவன் தனிமையில் செல்லும்பொழுது தனக்குள் வருத்தப்பட்டுக்கொண்டான். 'இந்த வயோதிப முனி இன்னும் கேள்விப்படவில்லைப் போலும், கடவுள் இறந்துவிட்டார் என்பதை.'

கடவுள் மரணித்துவிட்ட செய்தியையே மனித குலத்திற்கு நன்கொடையாக எடுத்துச்சென்றான் சாரதுஷ்ரன்.

மேற்குலக தத்துவ தரிசனத்தில் நாத்திக வாதம் புதிதான, புரட்சிகரமான கருத்தோட்டம் அல்ல. கடவுட் கோட்பாட்டை மறுதலித்து எத்தனையோ பேர் எழுதியிருக்கிறார்கள். கிரேக்க பொருளியவாதிகளிலிருந்து, போயர்பாக், கார்ல் மார்க்ஸ் வரை, நீண்ட வரிசையில், காலத்திற்கு காலம் எத்தனையோ சிந்தனையாளர்கள் கடவுட் கோட்பாட்டை தகர்த்துவிட முனைந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது நீச்சேயின் நாத்தீகம் ஏன் இத்தனை பிரபல்யம் பெற்றது? கடவுள் இறந்துவிட்டார் என அவர் விடுத்த பிரகடனம் ஏன் இத்தனை சிலுசிலுப்பை ஏற்படுத்தியது?

கடவுளின் மரணத்துடன் மனித இருப்பு அர்த்தத்தை இழக்கிறது. மனித வாழ்வு அபத்தமாக மாறுகிறது. மனித நம்பிக்

www.tamilarangam.net



கைத் தூண்கள் இடிந்துபோகின்றன. இருப்பின் மறுபக்கமான இல்லாமை தவிர்க்க முடியாத பேருண்மையாக விஸ்பரூபப் பரிமாணம் கொள்கிறது. ஏன், எப்படி, எதற்காக என்ற காரண காரியங்கள் அர்த்த மற்று வலுவிழந்துபோக மனித வாழ்வில் இருள் சூழ்ந்துகொள்கிறது. முடிவில்லாப் பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையில் நின்றபடி, மானிட இனம் பாதை தெரியாது தடுமாறுகிறது; தனித்துப்போய் நிற்கிறது. நிச்சயமானது ஒன்றாக இல்லாமையே இருப்புக்கொள்கிறது.

நீச்சேயின் நாத்தீகம் கடவுளின் மரண சாசனத்தை மட்டும் எழுதிவிடவில்லை. கடவுள் இல்லாத உலகில், மனித இருப்பின் அவலமான, நிலையற்ற தன்மைபற்றியும் எடுத்துக்கூறுகிறது. கடவுளின் சாவுடன் மனிதனின் கனவுகளும் செத்துப்போய்விடுகிறது என்ற கோரமான உண்மையையும் அது எடுத்தியம்புகிறது.

அனந்த காலமாக, அனைத்திற்கும் அதுவே அர்த்தம் கொடுத்தது. இருப்பிற்கும் அதுவே இலக்கணம் வகுத்தது. வாழ்விற்கும் அதுவே விளக்காக இருந்தது.

அதன் நிழலில், மனிதன் நிம்மதியாக உறங்கினான். அதன் நினைவில், தனது சோகத்தை துடைத்துக்கொண்டான். அவனது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் அதுவே ஆட்கொண்டு நின்றது. அந்தக் கடவுளின் குழந்தையாக மனிதன் தன்னைக் கற்பித்துக் கொண்டான்.

அந்தக் கடவுள் இப்பொழுது இறந்துவிட்டார். நிரந்தரமாகவே அந்தச் சூரியன் அஸ்தமித்துவிட்டது.

கடவுளின் இறப்பிற்கு காரண கர்த்தா யார்? படைத்தவனை அழித்தவன் யார்? அது மனிதன்தான் என்கிறார் நீச்சே.

*THE GAY SCIENCE* என்ற நூலில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் நீச்சே.

"காலைவேளை, சூரியன் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த அந்த நேரத்தில், பைத்தியக்காரன் ஒருவன் கையில் விளக்கை ஏந்தியவண்ணம் சந்தைகூடும் அந்த இடத்திற்கு ஓடிவருகிறான். அங்கிருந்த மக்களைப் பார்த்து, 'நான் கடவுளைத் தேடி அலைகிறேன். நான் கடவுளைத் தேடி அலைகிறேன்,'' என்ற உரத்த குரலில் கத்தினான்.

"கடவுள் எங்கே இருக்கிறார்? உங்களுக்குத் தெரியாதா? நான் சொல்கிறேன், அவர் எங்கே இருக்கிறார் என்று. நீங்கள் கடவுளைக் கொலைசெய்துவிட்டீர்கள். நீங்களும் நானுமாகச் சேர்ந்து கொலைசெய்துவிட்டோம். நாம் எல்லோருமே கொலைகாரர்கள். அந்தப் பெரும் கடலை, எல்லையற்ற சமுத்திரத்தை நாம் எவ்வாறு குடித்து முடித்தோம்? அந்தப் பிரகாசமான அடிவானத்தை எதைக்கொண்டு அழித்துவிட்டோம்? சூரியனிலிருந்து இந்தப் பூமியை நாம் கட்டவிழ்த்துவிட்டது எப்படி? இந்தப் பூமி இப்பொழுது எங்கே அசைந்து

*நீச்சேயின் நாத்தீகம் கடவுளின் மரணசாசனத்தை மட்டும் எழுதிவிடவில்லை. கடவுள் இல்லாத உலகில், மனித இருப்பின் அவலமான நிலையற்ற தன்மைபற்றியும் எடுத்துக்கூறுகிறது. கடவுளின் சாவுடன் மனிதனின் கனவுகளும் செத்துப்போய்விடுகிறது என்ற கோரமான, உண்மையையும் அது ,எடுத்தியம்புகிறது.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்கிறது? சூரியனிலிருந்து அறுபட்ட இந்தப் பூமியானது அதள பாதாளத்தில் விழுந்துகொண்டிருக்கிறது. அது வழி தெரியாது எல்லாத் திசைகளிலும் சுழல்கிறது. நாம் முடிவில்லாத சூன்ய வெளியில் புகைந்துகொண்டிருக்கிறோம். இந்தப் பூமியை ஒரு பயங்கர இருள் கவ்விக்கொள்வதை நீங்கள் கண்டுகொள்ளவில்லையா? இனிப் பகல் இல்லாதொழிந்துபோகும். மாறி, மாறி, தொடர்ச்சியாக இருள்தான் நிலைத்துவிடப்போகிறது. இனிமேல் காலையில்தான் விளக்கேற்றவேண்டும். கடவுளின் பிணத்தை இப்போது புதைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த சவக் குழியைத் தோண்டுபவர்களின் சப்தம் உங்களுக்கு கேட்கவில்லையா? கடவுளின் பிணம் அழுகி துர்நாற்றம் எடுக்கிறதே, அந்த வாடை உங்களுக்கு மணக்கவில்லையா? கடவுள் இறந்துவிட்டார். நிச்சயமாக செத்துப் போனார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவரைக் கொன்றுவிட்டோம். இந்தக் கொலையைப் புரிந்துவிட்டு நாம் எவ்விதம் நிம்மதியாக வாழமுடியும். எல்லாம் வல்ல, புனிதத்தில் புனிதமான அது, எமது கத்திகளுக்குப் பலியாகி செத்துப்போனது. இந்த இரத்தக் கறையை யார் எம்மிடமிருந்து துடைத்தெடுக்கப்போகிறார்கள்? எமது பாவக் கறையை எந்தப் புனித நீரில் நாம் கழுவிக்கொள்வது? எவ்வித மான புனிதச் சடங்குகளை நிகழ்த்தி நாம் இந்தச் சாபக்கேட்டிலிருந்து தப்பிக்கொள்வது?''

அங்கத பாணியில், குறியீட்டு உத்தியில், எதைச் சொல்ல விழைகிறார் நீட்சே.

மேற்குலக மனிதன் கடவுளை இழந்து நிற்கிறான். கடவுளிலிருந்து அந்நியமாகி நிற்கிறான். கடவுட்கோட்பாட்டில் கட்டப் பட்ட கருத்துலகிலிருந்து வேறுபட்டு நிற்கிறான். வளர்ந்துவரும் விஞ்ஞானமும், அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் அவனை ஒரு புதிய யுகத்திற்கு இட்டுச் செல்கிறது. இந்தப் புதிய யுகத்தில் அவனது பழைய கனவுகள் மடிந்துபோகின்றன. அந்தக் கனவுகளில் ஒன்றான கடவுளும் மடிந்துபோகிறார் கடவுளின் மரபில்வந்த அறநெறிகளும் மடிந்துபோகின்றன.

கடவுள் இல்லாத உலகில், மனிதனின் இராட்சியம் எப்படி அமையும்? அன்பும், அறமும், கருணையும் அற்ற நீட்சேயின் மகா மனிதர்கள் மனித குலத்தை எந்தப் பாதையில் இட்டுச் செல்வார்கள்?

ஹிட்லர் நீட்சேயின் எழுத்துக்களை மிகவும் விரும்பிப் படித்தார் பலதடவைகள் திரும்பத் திரும்பப் படித்தார். நீட்சே கண்ட கனவின் திருவுருவமாக, மகா மனிதனாக, தன்னை எண்ணிக்கொண்டார். அந்த மகா மனிதனாக செயலிலும் இறங்கினார்.

ஹிட்லரின் இராட்சியம் எப்படி எழுந்தது? எப்படி வீழ்ந்தது? அந்த வரலாற்றுப் பூகம்பம் எத்தகைய பேரழிவை மனித குலத்திற்கு ஏற்படுத்தியது? என்ற உண்மையைப் புரிந்துகொண்டவர்கள் நீட்சே காட்டும் பாதையில், மனித நேயம் செத்துக்கிடக்கும் அந்த இருண்ட பாதையில், காலடி எடுத்து வைக்கமாட்டார்கள். □□

மிக விரைவில் 'வெளிச்சம்' - சிறுகதைச் சிறப்பிதழ்' ஒன்றினை வெளியிடவுள்ளது. இந்தச் சிறப்பிதழுக்கான படைப்புக்களை முடிந்தவரை கூடியகெதியில் எமக்கு அனுப்பி வையுங்கள்.
**'வெளிச்சம்'**
*விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்*
*நடுவப்பணியகம், கோண்டாவில்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மதிப்பீடுரை

# வெளிச்சம்

## வெள்ளி இதழ்

### — ஒரு மனப்பகிர்வு

*வவுனியா திலீபன்*




விடுதலைக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் இந்த மண்ணில் கலை, இலக்கியத்தின் தேவைகளும் அதிகமுண்டு. எமக்கெதிராக இழைக்கப்பட்டு வரும் கொடுமைகள், எமது எழுச்சிகள், எமது தியாகங்கள் ஆகியவை கலை, இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியவையே.

இந்தப் பணியை தமிழீழத்திலிருந்து வெளிவரும் 'வெளிச்சம்' சஞ்சிகை செய்து வருகின்றது என்று உறுதியாகச் சொல்லலாம்.

வெளிச்சத்தின் இருபத்தைந்தாவது இதழ் வெள்ளி மலராக வெளிவந்துள்ளது இந்த மண்ணின் நிகழ்வுகளை வெளிச்சம் பதிவு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

பல வடிவங்களில் எமது இனம் ஒடுக்கப்படுகின்றது. கல்வி, கலாசாரம், பொருளாதாரம் எனப்பல வகைகளில் நாம் நசுக்கப்படுகின்றோம். எமக்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகள் உலகத்தின் கண்களுக்கு தெரியாமல் போய்விடும் நிலை மாற வேண்டும். இதனால், சமகால நிகழ்வுகள் பதிவு செய்யப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் வெளிச்சம் வெளியிடப்படுகின்றது. இந்த மண்ணின் ஆவணமாக இதைக் கொள்ள முடியும். யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் கலை, இலக்கிய வாதிகளுக்கு 'வெளிச்சம்' ஒரு சிறந்த களமாக அமைந்துள்ளது.

மாதம் தோறும் வெளியிடப்படும் இந்த சஞ்சிகையின் 'வெள்ளி இதழ்' 144 பக்கங்களில் வெளிவந்துள்ளது. முகப்பு ஓவியம் தேடுதலுக்குரியதுவாக, சிறப்பாக அமைந்துள்ளது. ஓவியர் கோபாலியின் திறமையை இதன்மூலம் வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளடங்கியுள்ளவற்றை கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் நேர்காணல் உட்பட மூன்று பேரின் நேர்காணல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எட்டுக் கட்டுரைகளும் மூன்று மதிப்பீடுகளும், பதினொரு பேரின் கவிதைகளும் ஏழு எழுத்தாளர்களின் சிறுகதைகளும் வெளிவந்துள்ளன.

மிகவும் தரம் வாய்ந்த விஷயங்கள் வெளிச்சத்தின் 'வெள்ளி இதழி'ல் அடங்கியிருப்பதை மறுக்க முடியாது.

இங்கு பதியப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயங்களும்வாழ்வனுபவங்களுடன், இந்த தேசத்தின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டவை.

நேர்காணலை எடுத்துக் கொண்டால் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் கருத்துக்கள் சிந்திக்கத் தூண்டுகின்றன.

'இன்று எமது வாழ்வும், வாழ்வனுபவமும் விடுதலை வேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. அந்தப் போராட்ட சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்து விட்டது' என்ற தேசியத் தலைவரின் கருத்து சிந்திக்க வைக்கின்றது.

'தமிழரின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம். இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றை, கலை, இலக்கியமாக உருவகப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்கு அறியச் செய்வது இன்றைய சிருஷ்டிகர்த்தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகிறேன்'' என்ற தலைவரின் கருத்தின் உண்மையை எமது படைப்பாளிகள் உணர்ந்து வருகின்றார்கள்.

'வெளிச்சம்' காலத்தைப் பதிவு செய்யும் பெரும் பணியில் முன்னிற்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

வண. பிதா க. அ. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளின் கருத்துக்கள் செறிவுள்ளவை. 'சொந்த லாபங்களுக்காக, குறுகிய நோக்கங்களுக்காக, சுயதிருப்திக்காக இந்த விடுதலைப் போராட்டம் நடைபெறவில்லை. தன்னலமற்ற தியாகத்தின் அடிப்படையில் பரந்த நோக்குடன் இது நடைபெறுகிறது என்ற கருத்தில் எமது போராட்டத்தின் புனிதத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

'21ஆம் நூற்றாண்டின் தமிழிலக்கியத்தின் வழிகாட்டியாக ஈழத்து இலக்கியம் உருவாகும்' என்றவரும் 'எங்கு போராட்டம் நடைபெறுகிறதோ அங்கு தான் சிறந்த இலக்கியம் படைக்கப்படும்' என்றவருமான 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியர் கோமல் சுவாமிநாதனின் நேர்காணல் முக்கியம் வாய்ந்தது. ஆயினும் இந்த நேர்காணல் நீண்டதாக இல்லாமலும் கலை, இலக்கியம் சம்பந்தமான விரிவாக அமையாததும் கவலைக்குரியது.

கட்டுரைகளை அவதானித்தால் சில கட்டுரைகள் பொதுத்தன்மை வாய்ந்தவையாக - காணப்படுகின்றன.

செ கிருஷ்ணராசாவின் 'ஈழத்தில் நாகர் மரபுகள் - ஆய்வுக்கான சில அடிப்படைத் தகவல்கள்' என்ற கட்டுரையும் செல்வி. யசோதா பத்மநாதனின் 'இலங்கை இனப்பிரச்சனையில் மகாவம்சத்தின் பங்கு -ஒரு பார்வை' என்ற கட்டுரையும், ப. புஸ்பரத்தினத்தின் 'கல்முனை தொட்டு அரசபுரம் வரையிலான - புராதன தமிழ்க்குடியிருப்புகள்' என்ற கட்டுரையும் பொதுத் தன்மை சிலவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளன. இந்தக் கட்டுரைகளில் வெளியிடப்படும் சில அடிப்படை உண்மைகள் எமது மக்களுக்கு பெரிதும் பயன்பாடாக அமையும்.

'கலைத்திறம் பற்றிய கருத்துக்கள் சில' என்ற முருகையனின் கட்டுரையில், 'இப்பொழுது நாங்கள் என்ன செய்கிறோம்? கருத்து இரவல்; உத்தி இரவல்; உள்ளடக்கம் இரவல்; அணுகுமுறை இரவல்; நயக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விதம் இரவல்; திறனாய்வு இரவல்; தீர்ப்பு இரவல்; இந்த இரவல்களுக்கு இடையிலே கலைத்திறத்தை நாங்கள் எங்கே தேடுவது? எப்படித் தேடுவது?, என்று கேள்வி கேட்கும் அவர், அவற்றிற்கான பதிலையும் தருகின்றார்.

கலாநிதி நா. சுப்பிரமணியனின் 'சுவைத்தலும் மதிப்பிடுதலும்' என்ற கட்டுரையில், சுவைத்தல் என்ற நிலையினின்று திறனாய்தல் என்ற நிலைக்கு ஒருவர் எப்படிச் செல்ல முடியும் என்பது பற்றி மிக விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

'கலை, இலக்கியக் கல்வியும் திறனாய்வும் ஒரு மீள்நோக்கு' என்ற கலாநிதி சபா. ஜெயராசாவின் கட்டுரை ஆழமாக அவதானிக்கப்படவேண்டியது. 'கலை இலக்கியங்களின் பண்பை யாதாயினும் ஓர் அளவு கோலுக்குள் சுருக்குதல் விபத்துக்களை ஏற்படுத்துவதாக அமையும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அடேல் ஆன் எழுதியுள்ள 'பெண் ஒடுக்கு முறையும் ஆயுதப் போராட்டமும்' என்ற நீண்ட கட்டுரையில், 'எமது தேசத்தின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம் அவசியமானது. இதனால் பெண் விடுதலை என்பது பிரத்தியேகமான சமூகப் பிரச்சினை, இந்தப் பெண் விடுதலைப் போராட்டத்தை பெண்களே முன்னெடுக்க வேண்டும் இது ஒரு தொடர்ச்சியான போராட்டம் தேச விடுதலைக்கு பின்னரும், சமூக மாற்றத்தின் பின்னரும் இந்தப் போராட்டம் தொடரவேண்டும்' என்ற தமது கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

'சமகாலத்தமிழ்ப் புனைகதை' என்ற தலைப்பிலான கட்டுரையை பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதியுள்ளார்.

'புனைகதைத் துறையில் ஒரு புதிய வெளிப்பாட்டு முறைமை' தோன்றிவிட்டதை அவர் அக்கட்டுரையில் விரிவாக ஆராய்ந்திருக்கின்றார்.

பிரம்மஞானியின் 'மனிதனும் வரலாறும்' என்ற தொடர் கட்டுரையின் நான்காம் பகுதி வெளிவந்திருக்கிறது. அக்கட்டுரையின் இறுதிப் பகுதி இந்த இதழில் வெளிவந்திருக்கின்றது.

மற்றும் 'அரங்கில் காட்சி அமைப்பு ஒரு நோக்கு' என்ற மு. இராதாகிருஷ்ணனின் கட்டுரையும் வெளிவந்துள்ளது.

'எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்' என்ற தலைப்பில் ஆர். நந்தகுமாரும், 'காற்றுவெளி' வீடியோப் படம் குறித்து ராஜராகுலனும், 'மண்ணுக்காக' வீடியோப் படம் குறித்து நம்பியாரூரனும் மதிப்பீட்டினை எழுதியுள்ளனர்.

தமிழீழத்தில் பிரபலம் வாய்ந்த கவிஞர்கள் இந்த இதழில் கவிதை படைத்துள்ளனர். பலரின் கவிதைகள், மிக அழகாக, எமது பிரச்சினைகளை ஆழமாக அவதானித்து படைக்கப்பட்டுள்ளன.

மாலிகாவின் கவிதையிலிருந்து கருணாகரனின் கவிதைகள் வரை பல கவிதைகள் சிறப்பாகவுள்ளன.

மாலிகாவின் கவிதையில் இந்த மண்ணின் நம்பிக்கை சொல்லப்பட்டுள்ளது.

'நெருஞ்சி எரிந்து நீறானாலும்... அறுகு படர்ந்து அழகாகும்' என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதையின் இறுதியில்,

*'சீருடை தரித்த சிறுவனே!*
*உன்னால் மீண்டும் இவையெல்லாம்*
*- உயிர்க் கட்டும்'*
*முனியப்பர் கோவிலின்*
*பின்னேரப் பூசைக்குப் பெரியமணி*
*- அடிக்கிறது,*

*அச்சமில்லை,*
*இனி எல்லாம் பச்சை நிறமாகும்'*

- என்ற வரிகளில் எமது மண்ணின் எழுச்சியும் தியாகமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோ. பத்மநாதன் வீ. பரந்தாமன் முருகையன், இளையவன், காசி ஆனந்தன் போராளிகளான சி. அமுதசாகரன், அடம்பனூர் செ. திருமாறன், இ. திருமாறன், வடமராட்சி. அரசண்ணா, உதயலட்சுமி, நா. பாஸ்கரன், கி. குட்டி, அரசன் ஆகியோரின் கவிதைகளும், மற்றும் கல்வயல் வே. குமாரசாமி, வளநாடன், கருணாகரன் ஆகியோரின் கவிதைகளும் வெளிவந்துள்ளன.

சிறுகதை வடிவத்தில் மட்டுமல்ல கவிதை வடிவத்தில் கூட தமிழ் இலக்கியத்தின் வழிகாட்டியாக ஈழத்து இலக்கியம் திகழுகின்றது என்பதை நாம் சொல்லிக் கொள்ளலாம்

வெளிச்சத்தை நாம் பாராட்டுவோம். எமது புனைகதைஞர்களை நன்கு பயன் படுத்திக் கொண்டதற்காக— ஆம்; இந்த வெள்ளி மலரில் வெளிவந்துள்ள கதைகள் யாவும் இந்த மண்ணின் செய்திகளை செழுமையாகச் சொல்ல முனைந்துள்ளன.

மலரன்னை, சு. மகேந்திரன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், சாந்தன், நாக. பத்மநாதன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோர் கதைகளை எழுதியுள்ளனர்.

சு. மகேந்திரன், செங்கை ஆழியான், சாந்தன் ஆகியோரின் கதைகள், நீண்டதாக உள்ளன. எல்லாக் கதைகளும் மிக காத்திரமானதாகவும் எமது யதார்த்தத்தை வெளிப்படுத்தும் இலக்கியங்களாகவும் தோன்றுகின்றன.

பொழுது போக்குக்காக, உப்புச் சப்பற்ற இலக்கியம் படைக்கும் தன்மை ஈழத்தில் இல்லாதொழிந்து வருவதை வெளிச்சம் இதழின் மூலம் அவதானிக்க முடிகின்றது.

இந்த இதழின் பல பக்கங்களில் எமது வாழ்வியல் நிகழ்வுகளை செய்திகளாகச் சொல்லும் புகைப்படங்கள் பதிவாகியுள்ளன.

விறகு சுமக்கும் சைக்கிள்களும், அதனை ஓட்டும் உழைப்பாளிகளின் இளைப்பாறலும், எமது மண்ணில் விளைந்தவை விற்பனை செய்யப்படுவதும், இடம்பெயர்வின் பின்னும் குலையாத உறுதியுடன் காணப்படுவோரின் நடமாட்டமும், பாடசாலைக் கட்டடங்கள் தகர்க்கப்பட்ட பின்னர், கொட்டில்களில் பாடம் கற்கும் மாணவர்களையும், மின்சாரம் தடைசெய்யப்பட்ட பின்னர் வீதிகளில்-மின் கம்பத்தில் பொருத்தப்பட்டுள்ள மண்ணெய் விளக்கினையும் படகேறிச் செல்லும் பெண் புலிகளையும், மற்றும் சில படங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கோபாலியின் ஓவியங்கள் 'வெள்ளி' இதழுக்கு அழகு சேர்க்கின்றன.

□□

சகலவிதமான படங்களும் பிறேம் செய்து கொடுப்பவர்கள்
தெய்வப்படங்கள், இயற்கைக் காட்சிப்படங்கள்
இன்னும் அழகிய பல்வேறு படங்களும் எம்மிடம்
விற்பனைக்குள்ளது

வாசுகி படமாடம்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஜூலை 05
**கரும்புலிகள் நாள்**

முகம்தெரிந்தும் தெரியாமலும்
விடுதலைக்குத் தங்கள் மூச்சை
காற்றுடன் கலக்க விட்ட 'கரும்புலி'களுக்கு
எங்கள் வீரவணக்கம்

— வெளிச்சம்

# 'கரும்புலிகள்' நினைவாக ஒரு பாடல்

**பல்லவி**

காற்றினுக்கும் வேர்க்கும் — அவர்
மூச்சழியும் போது
பூமரமும் வேகும் — அவர்
போய்வெடிக்கும் போது

கல்லுக்கும் கண்களில் நீர் வழியும் — வரும்
காலைப் பொழுதுகள் வாய் புதைக்கும்

**சரணம்**

தாயகப் பூமியின் காதலர் நாமெனத்
தம்முயிர்ப் பூக்களைச் சூட்டிடுவார்
தேவியின் மேனியைத் தொட்டவன்யாரெனத்
தேடியே குண்டெனப் போய்வெடிப்பார்

நெஞ்சில் விடுதலைத் தீயைச் சுமந்தொரு
நீண்ட நெடுவானம் கால்நடக்கும்
அஞ்சுதலற்ற கரும்புலி போய்விட
அண்ணனின் நெஞ்சு துடிதுடிக்கும்

எந்தையர் பூமியில் வந்தவர் யாரென
எங்கள் கரும்புலி பார்த்திருப்பார்
சந்தன மேனியைத் தீயினில் மூட்டியே
சாவுக்கு வாழ்வொன்று தந்திடுவார். □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடநூல்களுக்கமைய உருவாக்கப்பட்ட
பயிற்சி நூல்கள் —
ஆண்டு 01 தொடக்கம் ஆண்டு 11 வரைக்குமான
எல்லாப்பாடங்களுக்கும் எங்கள் வெளியீடுகள் உண்டு
சிறுவருக்கான நூல்கள்
பாடசாலை உபகரணங்கள்
காகிதாதிகள் எல்லாவற்றையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

# சு. வி. அச்சகம்
# பாடநூல் வெளியீடுகள்
# விற்பனை நிலையம்

217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

www.tamilarangam.net



மனநிறைவுடன் உங்கள் பிறந்த நாள் வைபவங்களையும்
திருமண நிகழ்வுகள் மற்றும் மங்களகரமான நிகழ்ச்சிகளையும்
கொண்டாடுவதற்கு
'சொர்ணா' வெதுப்பகத்தின்
'கேக் வகைகள்'
பிஸ்கற்வகைகள் என்றும் இருக்கின்றன.

தரமான பாண் தயாரிப்பாளர்கள்

# சொர்ணா வெதுப்பகம்

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

---

நியாயமான விலையில்
எல்லாவகை எரிபொருள்களையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்

# றியோ எரிபொருள் வாணிபம்

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விவசாயிகளின் நன்மதிப்புப் பெற்ற நிறுவனம்

விவசாயிகளுக்குத் தேவையான
உரவகைகள், கிருமி நாசினிகள், களை கொல்லிகள்
மற்றும் இரசாயனப் பொருட்களுக்கும்

முருகன் உழவர் களஞ்சியம்
23, கே, கே. எஸ். வீதி, சுன்னாகம்.

---

அனைத்து எரிபொருள் வகையும்
வாகனங்களுக்கான ரயர், ரியூப்
மற்றும்
வாகன உதிரிப்பாகங்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

ஜெகன் வர்த்தக நிலையம்
பலாலி வீதி,
திருநெல்வேலி.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால்
சகலபாடங்களும் போதிக்கப்படுகின்றன

20-06-94
புதியபிரிவு ஆரம்பம்

## O/L DAY CLASS

கணிதம்: எஸ். கருணாகரன்
விஞ்ஞானம்: இரா. அருட்செல்வம்

தமிழ்: ஞானா திருக்கேதீஸ்வரன்
சமூகக்கல்வி: இரா. கணேஷ்
ஆங்கிலம்: எஸ். சந்திரமௌலி

---

காலத்திற்குக் காலம்
நவீனத்துவம் வாய்ந்த கருவிகள் மூலம்
அனுபவத்திறமையுடன்
வீடியோப்படம் பிடித்திட

உங்கள் வாழ்வின் மகிழ்ச்சிகரமான
நாளில் பாலா வீடியோ பங்கேற்கிறது

# பாலா வீடியோ

WJMX 12 - புதிய மிக்ஸர் மூலம்
வெளிநாட்டு உள்நாட்டு இயற்கைக்
காட்சிகளுடன் உங்கள் மங்கள நிகழ்வு
களையும், வாழ்வின் முக்கிய நிகழ்ச்சி
களையும் வீடியோவில் தருகிறது

புதிதாக இறக்குமதி
செய்யப்பட்ட
நவீன வீடியோ
சாதனங்களைப்
பயன்படுத்துகிறது

பாலா வீடியோ

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்